உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.


தொகுதி-௪௧.] தாரண-௵ ஆடி—ஐப்பசி௴ [பகுதி ௯—௧௨.

Vol. 41. July—November 1944. No. 9—12.


உள்ளுறை.


பரிமேலழகர்:- } ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. உ௩௭—உ௪௪

வாழ்க்கையும் விஞ்ஞானமும்:- } ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L. உ௪௫—உ௬௦

பண்டைத்தமிழர்:— } சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர் உ௬௧—உ௬௬

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத் தீர்மானங்கள் உ௬௭, உ௭௩

அநுதாபக்குறிப்பு:— ... ... ... உ௬௮

மதிப்புரை:— ... ... ... ... உ௬௯—உ௭௨

செந்தமிழ்நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்:— ... உ௭௪—உ௭௫

ஒரு வரவேற்புவிழா: — உ௭௫—உ௭௬

செந்தமிழ் 41-ஆம் தொகுதியின் உள்ளுறை முதலியன:—


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.


வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1944.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரு. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... | 1 | 8 | 0 |
| 3. | *யாப்பணியிலக்கணங்கள் ... ... | | | |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... | 4 | 0 | 0 |
| 7. | *தோத்திரத்திரட்டு ... ... | | | |
| 8. | *தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம் | 6 | 0 | 0 |
| | * ஷை இரண்டாம்பாகம் ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... | 5 | 0 | 0 |
| 9. | *அபிதானசிந்தாமணி ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... | 0 | 6 | 0 |
| 12. | *அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... | | | |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... | 0 | 6 | 0 |
| 14. | *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | | | |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... | 0 | 4 | 0 |
| | *திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன | 0 | 1 | 0 |

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—சக.] தாரண-௵ ஆடி—ஐப்பசிமீ [பகுதி கூ—கஉ.

Vol. 41. July—November 1944. No. 9—12.

# பரிமேலழகர்*

[சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர் திரு. ராவ்ஸாஹேப். எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல்.]

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் தமிழ்மக்களுக்கு என்றும்பெருமை யளித்துவரும் பெருநூல். இந்த நூலைக் கற்றுணர்ந்த பிறநாட்டு அறிஞர்கள்பலர் இதன் அரிய கருத்துக்களைத் தங்கள் நாட்டினரும் கற்றுப் பயன்பெறவேண்டுமென்றுவிரும்பித் தங்கள்தங்கள் பாஷைகளில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். இந்நூல் தோன்றியகாலந்தொட்டுச் சுமார் 1500-ஆண்டுகளாக, இதன் புகழ் வளர்ந்துகொண்டேவருகிறது; புகழ்களையெல் லாம் தொகுத்துத் திருவள்ளுவமாலை யென்ற தனிநூலும் தோன்றியுள்ளது. இதன் நயங்களைக்குறித்து எழுதாத தமிழறிஞர்கள் இல்லை; பேசுநிகழாத பிரசங்கமேடையும் இல்லை. என்றாலும் இதன் பெருமையை ஆராய்ந்து உள்ளபடி உணர்ந்தவர் மிகச் சிலரே. இவருள் தலைசிறந்தவர் பரிமேலழகர்.

வள்ளுவர்குறட்பாக்கள் சுருங்கிய சொற்களுடையன; எளிமையும் தெளிவும் உள்ளன. ஆனால், இந்நலங்களால் நாம் ஏமாந்துவிடக்கூடாது. சில மடுக்களில் அடிநிலத்தை யெட்டித்தொட்டுவிடலாம்படி நீர் தெளிந்துநிற்கும். இத்தோற்றத்தை நம்பி ஒருவன் காலைவிடுவானானால், ஆழம் எய்க்கவொண் ணாததாயிருக்கும். இதுபோலவே வள்ளுவரது தெளிந்த எளியதொடர்க ளிலே கருத்துக்கள் மிக ஆழ்ந்தனவாயிருக்கும். அவற்றை அறிந்துகொள் ளுதல் எளிதன்று. கற்கக் கற்க அவற்றின் ஆழம் புலப்பட்டுக்கொண்டே யிருக்கும்; அவற்றின் நயங்களும் மிகுந்து தோன்றிக்கொண்டேயிருக்கும்.

நவில்தோறும் நூல்நயம் போலும் பயில்தோறும்
பண்புடை யாளர் தொடர்பு

---

*17—7—44ல் சென்னை அகிலஇந்திய ரேடியோவில் ஒலிபரப்பியது. அநுமதியுடன் வெளியிடப்படுகிறது.

என்று வள்ளுவர் தாமே கூறியதற்கு அவருடைய பெருநூலே சிறந்த சான்று. பரிமேலழகர் இத்தன்மையை நன்கு அறிந்திருந்தனர். எளிமையும் தெளிவும் அவரை ஏமாற்றிவிடவில்லை. தமது பரந்த கல்விமுழுமையும் நுண்ணிய அறிவுமுழுமையும் அரிய மொழிவன்மைமுழுமையும் வள்ளுவரின் ஆழ்ந்தகன்ற கருத்துக்களை உணர்தற்குப் பயன்படுத்தினர்.

மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

இயற்கையறிவும் கல்விகேள்வியும் நிறைந்திருப்பவர்களுடைய ஆற்றலால் உணரப்படாமல் முன்னிற்பது யாதேனும் உளதா? இல்லை. இங்ஙனம் உணர்ந்து தெளிந்து வள்ளுவரது கருத்துக்களைத் தமிழ்மக்களுக்கு ஓர் உரையெழுதி அறிவுறுத்தினர் பரிமேலழகர். உரையின் பெருஞ்சிறப்பையுணர்ந்தே, ஒருபுலவர்,

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ-நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி

என்ற செய்யுளைப் பாடினர்.

இச் சிறந்த உரையை எழுதியதோடு பரிமேலழகரது செயல் அமைந்துவிடவில்லை. வள்ளுவரது புகழை உண்மையாக வளர்த்த அருஞ்செயலும் இவர்பாற்பட்டதே. இவர்க்குமுன்பு எத்தனையோ அறிஞர்கள் திருக்குறளுக்கு உரையெழுதி அந்நூலின் கருத்துக்களை விளக்கமுயன்றனர். பரிமேலழகரை உள்ளிட்டுப் பத்து ஆசிரியர்களைக் கூறுவர்.

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி - திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்கு
எல்லையுரை செய்தார் இவர்.

இப்பத்து ஆசிரியர்களிலும் கடைசியில் தோன்றியவர் பரிமேலழகரென்றும் அவருக்கு முன்புள்ளவர்கள் எழுதிய உரைகள் ஒன்பதும் இருந்தும் இல்லாதனபோலத்தானென்றும் ஒரு பழஞ்செய்யுள் கூறுகிறது.

திறந்தெரிந் துரைத்த செவ்விழப் பாலுக்கு
ஒருநரை யின்றி ஒன்பது சென்றும்
ஐயுறவாக நையுறு காலை

என்பது அச்செய்யுட்பகுதி. இவ் வொன்பது உரைகளுள் மணக்குடவர் உரையொன்றே அச்சில் வந்துள்ளது. காலிங்கர் உரையும் பரிப்பெருமாள்

உரையும் எட்டுப்பிரதியில் உள்ளன. இவைகளை நோக்கிய அளவில், இவை உரைநயமற்றன என்பதை மறுப்பதற்கு நியாயம் சிறிதும் இருப்பதாகத் தோன்றவில்லை. பரிமேலழகரொருவரது உரையொன்றே வள்ளுவர் நூலின் பெருமைக்குத்தக்கபடி அமைந்து அதன்புகழை வளர்க்கவல்லதாயுள்ளது.

இங்ஙனமாகத் திருக்குறளின்பெருமையை ஆராய்ந்து தெரிந்து, அதன் கருத்துக்களை நுட்பமாக உணர்ந்து, அதற்கு அரிய உரையியற்றி அதன் புகழை வளர்த்தவர் பரிமேலழகர் ஆவர். இவருடைய வரலாறு யாது?

இவரை ஒரு பழஞ்செய்யுள், 'கருத்தான் வகுத்தமைத்தான் கலைதே ரொக்கை காவலனே' (பெருந்.1547) என்று குறிப்பிடுகிறது. எனவே, ஒக்கூர் என்ற ஊரில் இவர் வாழ்ந்தவர் என்று விளங்குகிறது. இந்த ஒக்கூர் பாண்டிநாட்டைச் சார்ந்ததென்பது, 'போற்றுதமிழ்க் கூடற் பரிமேலழகிய னென்பான்' (பெருந்.1548) என்ற வேறொரு பழஞ்செய்யுளால் புலனாகிறது. இவ்விரண்டுசெய்யுட்களின் ஆதாரமுங்கொண்டு இவர் ஒக்கூரிற் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர் என்று எண்ண இடமுள்ளது. இக்கருத்து ஒரு புறமிருக்க, இவரைக் காஞ்சியில் வாழ்ந்தவரெனத் தொண்டைமண்டல சதகச்செய்யுளொன்று கூறுகிறது. 'திருக்காஞ்சிவாழ் பரிமேலழகன் - வள்ளுவர் நூற்கு வழிகாட்டினான் தொண்டை மண்டலமே' என்பது அச்செய்யுட்பகுதி. கர்ணபரம்பரையும் இக்கொள்கையையே ஆதரிக் கிறது என்பர். உண்மை தெளியமுடியவில்லை. தொண்டைமண்டலசதகச் செய்யுள் அபிமானம்பற்றித் தோன்றியிருத்தல்கூடும். சோழநாட்டினரான சம்பந்தரைப்பற்றி இச்சதகத்திற் கூறப்பட்டுள்ளதனை நோக்குமிடத்து, இதில்வரும் சரித்திரச்செய்திகள் அனைத்தும் உண்மையெனக் கொள்ளுதற் கில்லை. கர்ணபரம்பரை சதகச்செய்யுளை அடிப்படையாகக்கொண்டு பிற் காலத்தார் கற்பித்துக்கொண்டதாகவும் இருக்கலாம். ஆதலால் வேறு தக்க ஆதாரம் கிடைக்கும்வரை பரிமேலழகர் பாண்டிநாட்டு ஒக்கூரினர் என்று கொள்ளுதலே தக்கது.

பரிமேலழகர் என்ற பெயரினின்று இவரை வைஷ்ணவரென எளிதில் தெரிந்துகொள்ளலாம். இதற்கேற்பத் 'திருவுடைமன்னரைக்காணில் திரு மாலைக்கண்டேன்' (இறைமாட்சி - அவதாரிகை) எனவும், 'அற்றது பற் றெனில் உற்றது வீடு' (குறள் - 349 உரை) எனவும்,

நன்றாய் ஞானங் கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாமீர்த்
தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா ழுலப்பி லதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே யப்போ தேவீடு அதுவே வீடு வீடாமே (குறள்- 370 உரை)

எனவும் திருவாய்மொழியை மேற்கோள் காட்டியுள்ளார்.

இவர் பெயர் 'பரிமேலழகரையன்' எனப் பிரதிகளிற் காணப்படுகிறது. இதனால் இவர் அந்தணராவர் என்று கொள்ளலாம். தமது உரையில் இவர் காட்டும் வடமொழிவன்மையும் இதற்குச் சான்றுபகரும்.

இவரது காலம் யாது? காமத்துப்பாலின் அவதாரிகையில் 'வடநூலுட் போசராசனும் சுவை பலவென்று கூறுவார் கூறுக; யாம் கூறுவது இன்பச்சுவையொன்றனையுமே என இதனையே மிகுத்துக் கூறினன்' என்று காணப்படுகிறது. இங்குக்குறித்த வடநூல் போஜராஜன் இயற்றிய சிருங்காரப்பிரகாசமாகும். இவ்வரசன்காலம் 11-ம் நூற்றாண்டின் முற்பகுதி. இவன்காலத்திற்குப் பிற்பட்டவர் பரிமேலழகர் என்பது உறுதி. வேறொரு குறிப்பினால் நன்னூலை இயற்றிய பவணந்திக்குப் பிற்பட்டவரென்பதும் விளங்குகிறது. ஒருபொருட்பன்மொழி என்பது தமிழிலக்கணநூலாருடைய குறியீட்டுத்தொடர். மீமிசை என்பது இதற்கு உதாரணம். இக்குறியீடு தொல்காப்பியத்தில் இல்லை. இப்பேரிலக்கணம் 'ஒருபொருளிருசொற் பிரிவில வரையார்' (சொல்-460) என்று கூறும். நச்சினார்க்கினியர் முதலியோர் 'மீமிசை' போன்றதனை 'ஒருபொருளிருசொற் பிரிவில்லாதது' என நீண்டதோர் குறியீட்டினால் வழங்கினர். முதன்முதலில் 'ஒருபொருட் பன்மொழி' என்ற சுருங்கிய அழகிய தொடரை வழங்கியவர் நன்னூலாரேயாவர். முற்பட்ட ஏனை இலக்கணநூல்களொன்றிலேனும் இக்குறியீடு காணப்படவில்லை. பரிமேலழகர் இதனை இரண்டு இடங்களில் (571,863 உரை) எடுத்தாண்டுள்ளார். ஆதலால் இவர் நன்னூலார்க்கும் பிற்பட்டவராவர். நன்னூலார் காலம் 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். எனவே, பரிமேலழகர் 13-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவரல்லர் என்பது தெளிவு. இவரை 14-ம் நூற்றாண்டினரென்று கொள்வோமாயின் அது மிகப் பொருத்தமென்றே தோன்றுகிறது. 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசுபுரிந்த விஜயகண்ட கோபாலனது 27-ம் ஆட்சியாண்டில் (கி-பி 1272-ல்) காஞ்சீபுரம் வரதராஜப்பெருமாள்கோயிற் சாஸனமொன்றில் 'வண்டுவரைப்பெருமாளான பரிமேலழகிய பெருமாள் தாதர்' என்றொருவர் குறிக்கப்படுகிறார். இவர் உரைகாரராகிய பரிமேலழகரே யென்று கொள்ளுதற்குச் சான்று யாதும் இல்லை. ஓர் ஆராய்ச்சியாளர் 'சேனாவரையர் 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவரென்றும் இவர்கருத்துக்களைப் பரிமேலழகர் பின்பற்றியுள்ளாரென்றும் எழுதியுள்ளார் (சாஸனத் தமிழ்க் கவிசரிதம் பக்.-113-118). இதுவும் நமது உரைகாரர் 14-ம் நூற்றாண்டினரென்பதை வலியுறுத்துகிறது.

இவர் தமிழுக்குச்செய்துள்ள பெருந்தொண்டு யாது? திருக்குறளுக்கு இவர் ஒரு சிறந்த உரையெழுதினார். இதுவுமன்றி எட்டுத்தொகையுள் பரிபாடலுக்கும் இவர் உரையெழுதினரெனக் கொள்ளலாம். இந்நூலின்

சிறப்புப்பாயிரத்தால் இது நன்குவிளங்கும். ஒருசிலர் இரண்டுநூல்கட்கும் உரையிட்டவர் வேறுவேறாயிருத்தல்கூடுமோ என்று ஐயுறுவர். சுமார் 300 ஆண்டுகட்குமுன்பிருந்த திருமேனி இரத்தினக்கவிராயர் திருக்குறளுக்குப் பரிமேலழகர் செய்த உரையிற் சில கருத்துக்களை விளக்கி 'நுண்பொருண் மாலை' என்ற ஒருசிறுநூல் இயற்றியுள்ளார். இம்மாலையில், "பரிபாட்டினுள் 'மழையிருஞ்சூல்' என்பதனை முன்பின்னாகத்தொக்க இரண்டாம்வேற்றுமைத் தொகையென்றார் இவ்வுரையாசிரியர்" (குறள். 216) எனக் கூறுதலால் இரண்டுநூல்களின் உரையாசிரியரும் ஒருவரேயென்று இரத்தினகவிராயர் கொண்டனர். பரிபாடலுரை பரிமேலழகரது வடமொழியுணர்ச்சியின் பெருமையை நன்குஎடுத்துக்காட்டுகிறது.

இரண்டு பெருநூல்களுக்கு உரையெழுதினார் என்ற அளவில் இவரது தமிழ்த்தொண்டு முடிந்துவிடவில்லை. சங்கத்தமிழ்வழக்கு நின்றுபோய் வெகுகாலமாகிவிட்டது. அதன் சிறப்பியல்புகளான இனிமை, தெளிவு, சுருக்கம், நேர்மை முதலிய பண்புகள் யாவும் பெரும்பான்மை இலக்கியங் களினின்றும் நீங்கிப் பலநூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. இடைக்காலத் தமிழ் பிறந்து வடமொழிச்சொற்களும் வடமொழிக்காவியமரபுகளும் தமிழிற் குடிபுகுந்தன. பலவேறு நல்லியல்புகளும் தமிழில் வந்து அமைந்தன. ஆனால் அவற்றோடு சில தீயதன்மைகளும் புகுந்துவிட்டன. சுருக்கம், நேர்மை என்ற இயல்புகள் இரண்டும் ஒழிந்துபோயின; அலங்காரங்களும் ஆடம்பரங்களும் தலையோங்கின. வடசொற்கள் பெரும்பான்மை விரவித் தமிழ்ச்சொற்கள் சிறுகிவரத்தொடங்கின. இதனால் தமிழுக்கு இயற்கை யாய் அமைந்த ஆற்றல் சிறுகலாயிற்று. நூற்பொருள் பெரும்பாலும் வட மொழிக்குரியனவாய்முடிந்தன. இதனால் தமிழ்க்கவிஞர்களின் புதுவ தியற்றும் ஆற்றல் (inventive power) தடைப்பட்டுப்போயிற்று. இவ்விடை யூறுகளையும் துணைக்கருவியாகமாற்றி வெற்றிகொண்டு கம்பன் மகாகவியாய் விளங்கினானென்றால் அவனது பெருங்கவித்வசக்தியும், பேரறிவும், பேராற்றலுமே அதற்குக் காரணமென்று சொல்லவேண்டும். கம்பன் போன்ற அபூர்வப்பிறவிகளைவிட்டுவிட்டுப்பொதுவே பரந்துகிடந்த இலக்கிய நிலையை எடுத்துக்கொள்வோமானால் முற்கூறிய தீய இயல்புகளே மலிந்து கிடந்தன. அக்காலத்துக் கல்வியாளர் சிலர் இந்நிலைமைக்கு வருந்தினர். தமிழின் பண்டைநிலையை உன்னியுன்னி அந்நிலையைத் திரும்ப எய்துதல் கூடுமா என்று கருதலாயினர். சங்கத்தமிழின்மீதும் அதன் நன்முறையைக் கைப்பற்றிய பெருநூல்களின்மீதும் பொதுமக்கள் பற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்று எண்ணினர். அவற்றின் நல்லியல்புகள் தமிழில் மீண்டும் தழைக்கவேண்டுமென்று கருதினர். இந்நோக்கங்களைக்கொண்டு கல்வியில் தலைசிறந்தோர் சிலர் உழைத்துவந்தனர். சங்கத்தமிழுக்கு மீட்சி

மியக்கம் (return to classicism) நிகழ்வதாயிற்று. இம்மீட்சியியக்கத்திற்கு ஓர் அறிகுறியாக, சங்க இலக்கியங்களுக்கும் அவற்றோடொத்த பெருமையுடைய குறள்போன்ற பெருநூல்களுக்கும் செவ்விய உரைகள் எழுதப்பட்டன. இங்ஙனமாக மீட்சியியக்கத்தைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவர் பரிமேலழகர். 14, 15-ம் நூற்றாண்டுகளில் இவ்வியக்கம் முனைந்துநின்றதெனக் கொள்ளலாம்.

தாம் எடுத்துக்கொண்ட இருபெருநூல்களுக்கும் உரையெழுதி விளக்குவதே தமதுவாழ்வின் பெருநோக்கமாகப் பரிமேலழகர் கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொருநூலும் அது தோன்றியகாலத்துள்ள சமுதாயநிலை, கல்விநிலை, மொழிநிலை முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டே இயற்றப்படுவதாகும். காலத்தை முற்றிலுங் கடந்துவிடுவதென்பது யாருக்கும் இயலாததாகும். வள்ளுவரும் காலநியதியைக் கடந்தவரல்லர். அவரது திருவுள்ளத்திலே உதித்த கருத்துக்களும் அவர்காலத்துள்ள சமுதாயம், கல்வி முதலியவற்றின் நிலைகளுக்குத் தக்கபடி அமைந்துள்ளதென்பது கூறவேண்டா. அவரது பரந்துபட்ட கல்வியும் அவர் நூலுக்குப் பயன்பட்டிருத்தல்வேண்டும். அன்றியும், அவரது நூலோடு ஒத்த தன்மையுள்ள பழைய நூல்களையும் அவர் நுனித்தறிந்து கொள்ளுவன கொண்டு தள்ளுவன தள்ளியிருத்தல்வேண்டும். ஆகவே, அவர் நூலுக்கு உரையியற்றுவோரும் அவர் காலத்துச் சமுதாயநிலை, கல்விநிலை, அவர் கற்றிருக்கக்கூடியநூல்கள் முதலிய அனைத்தையும் நன்கறிந்து தம்மைத் தகுதியுடையராய் ஆக்கிக்கொள்ளுதல் அவசியம். அன்றியும், அவர் நூலை விளக்கியெழுந்த முன்னுரைகள் பலவற்றையும் ஆராய்தல் அவசியம். இவ்வாறெல்லாம் பரிமேலழகர் தம்மைத் தகுதியுடையராகச்செய்துகொண்டார் என்பதற்குத் தக்க சான்றுகள் அவருரையினிடத்தே காணப்படுகின்றன. மேலும், நூல் முழுமையும் பலமுறை நுண்மையாகக் கற்று ஆழ்ந்து சிந்தித்து, முன்பின் முரண்பாடு இன்றி ஒரு நோக்கில்வைத்து உறுப்புநெறிப்படுத்தி (Systematise) ஆராய்ந்து வைத்திருந்தனரென்றும் நாம் உய்த்துணரலாம். இங்ஙனம் நெறிப்படுத்தியுணர்தல் வள்ளுவரது பெருநூல்பற்றியவளவில் மிகமிக இன்றியமையாததாம்.

குறட்பா ஒவ்வொன்றும் சூத்திரம்போல் அமைந்துள்ளது. சிறிய கண்ணாடியிற் பெரிய உருவம் முதலியவற்றின் சாயை செவ்வையாகச் செறிந்து இனிதாக விளங்கும். அதுபோலச் சில எழுத்துக்களால் அமைந்த யாப்பிலே பலவகைப்பட்ட பொருள்களும் செவ்வையாகச் செறிந்து இனிது விளங்குமாறு இயற்றுவதே சூத்திரமாகும். இதிற் பலபொருள்களின் திண்மையும் நுண்மையும் சிறந்துதோன்றும்.

இங்ஙனம் அமைந்த குறட்பாக்களின் தன்மையைப் பரிமேலழகர் பல முகமாய் ஆராய்ந்துணர்ந்து பொருளின் திட்பத்தையும் நுட்பத்தையும் நன்குவிளக்கியுள்ளார்.

ஓர் உதாரணம் காட்டுகிறேன். அமைச்சர்களைப் பலவகையிற் பரிசோதனைசெய்து அரசர்கள் தெரிந்தெடுக்கவேண்டுமென்று வள்ளுவர் கூறுகிறார். அவ்வகைகளை,

அறம்பொரு ளின்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்

என்ற குறளிற் குறிப்பிடுகிறார். இதனைமாத்திரம் எடுத்துக்கொண்டால் பொருள் விளங்கமாட்டாது. இங்ஙனமே இக்குறிப்பிற்குரிய மூலம் தெரியாமற்போனாலும் இதன்பொருள் புலப்படமாட்டாது. மணக்குடவர், 'அறமும், பொருளும் இன்பமும் உயிரச்சமும் என்னும் நான்கின் கூறுபாட்டினையும் ஆராய்ந்து, ஆராய்ந்தபின்பு ஒருவன் அரசனால் தெளியப்படுவான். முன்பு நான்குபொருளையும் ஆராயவேண்டுமென்றார்; பின்பு தேறப்படுமென்கிறார்' என உரையெழுதினர். இதனால் பொருள் சிறிதும் விளக்கம் பெறவில்லை. குறளின் மூலம் இன்னதென்பதை இவ்வுரைகாரர் உணர்ந்துகொள்ளவில்லை யென்பது தெளிவு. பரிமேலழகர் மூலம் இன்னதென்பதனைத் தெரிந்து உரைவகுத்துள்ளார்.* சாணக்கியரது அர்த்தசாஸ்திரத்தில்

---

*"அறவுபதையாவது:— புரோகிதரையும் அறவோரையும் விட்டு, அவரால், 'இவ்வரசன் அறவோனன்மையின் இவனைப்போக்கி அறனும் உரிமையும் உடையானொருவனை வைத்தற்கெண்ணினம். இதுதான் யாவர்க்கு மியைந்தது. நின்கருத்தென்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது:-சேனைத்தலைவனையும் அவனோடியைந்தாரையும்விட்டு, அவரான், 'இவ்வரசன் இவறன்மாலையனாகலின் இவனைப்போக்கிக் கொடையும் உரிமையும் உடையானொருவனை வைத்தற்கெண்ணினம். இதுதான் யாவர்க்கு மியைந்தது. நின்கருத்தென்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்பவுபதையாவது:—தொன்றுதொட்டு உரிமையோடு பயின்றுளொரு தவமுதுமகளைவிட்டு, அவளால், 'உரிமையுள் இன்னாள் நின்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்கவேண்டுமென்று என்னைவிடுத்தாள். அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப் பெரும்பொருளும்

இவ்விஷயம் விரிவாய்க் கூறப்பட்டுள்ளது. இந்நூலினை நோக்கி விஷயத்தை நன்குணர்ந்து விளக்கமாகப் பொருளெழுதியுள்ளார். உரையை நோக்கிய அளவில் இதுவே உண்மையான பொருள் என்பதை யாவரும் ஒப்புவர்.

இங்ஙனம் கூறுவதனுல் பரிமேலழகருரை ஓரிடத்தும் வழுவியதில்லையென்று கருதலாகாது. தவறுதல் என்பது மக்கட்பிறவிக்கு இயல்பாகவுள்ளது. ஆனுல் அவருரையைப் பிழையென்று சொல்லுவது எளிதன்று; பலமுறை, பலமுகமாக ஆராய்ந்தபின்னரே பிழையிருக்கலாமோ என்று ஐயுறலாம். அப்போது ஒருதலையாகத் துணியமுடியாத நிலையும் ஏற்படலாம்.

பரிமேலழகரது தெளிந்த பேரறிவும் ஆராய்ச்சித்திறனும் மிகப் பரந்த கல்வியும் மொழித்திறமும் நோக்கி உமாபதிசிவாசாரியர் என்ற சைவப் பெரியார்,

வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்

என்று வாயாரப்புகழ்ந்தனர். தெய்வப்புலமைத் திருவள்ளுவரோடு ஒருங்கு வைத்தெண்ணப்படும் பெருமையுடையார் பரிமேலழகர் என்பதைக் காட்டிலும் சிறந்த புகழ் உண்டா?

---

கைகூடும்' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது:-ஒரு நிமித்தத்தின்மேலிட்டு ஓரமைச்சனுல் ஏனையோரை அவனில்லின்கணழைப்பித்து, இவர் அறைபோவானெண்ணற்குச் சூழ்இயினரென்று தான் காவல் செய்து, ஒருவனுல், 'இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச்செய்து நமக்கினியவரசனொருவனை வைத்தல் ஈண்டையாவர்க்கு மியைந்தது. நின்கருத் தென்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந்நான்கினும் திரிபிலனையவழி எதிர்காலத்துந் திரிபிலனெனக் கருத்தளவையாற் றெளியப்படுமென்பதாம். இவ் வடநூற்பொருண்மையையுட்கொண்டு இவரோதியதறியாது பிறரெல்லாம் இதனை உயிரச்சமெனப் பாடந்திரித்துத் தத்தமக்குத்தோன்றியவாறே யுரைத்தார்"

# வாழ்க்கையும் விஞ்ஞானமும்*

ஸ்ரீ பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L.

உலகவாழ்க்கைச் சரிதத்தை நமது பழங்காலப் புராணங்கள் கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் நான்கு பெரியயுகங்களாக வகுத்திருக்கின்றன. சத்தியம் தர்மம் முதலிய அறநெறிகளை அளவுகோலாக அமைத்துக்கொண்டு செய்யப்பட்ட பாகுபாடு இது. இவ்வாறே, அறிவை அளவுகோலாக அமைத்துக் கொண்டு, நாமும் உலகவாழ்க்கைச் சரிதத்தை மூன்று பெரிய யுகங்களாக ஒருவாறு பிரிக்கலாம். அஞ்ஞானயுகம், அபிப்பிராய யுகம், விஞ்ஞானயுகம் என்பவைதாம் இம்மூன்று பிரிவுகள்.

'மிகமிகப் பழங்காலத்திலே வாழ்ந்த மனிதர்கள் அனைவரும் பொதுவாக எல்லாவகைகளிலும் நம்மைக்காட்டிலும் மேம்பட்ட வர்கள், அவர்கள் அறிவில் மிகுந்தவர்கள்; நீண்ட ஆயுளுடை யவர்கள்; நோய் அற்றவர்கள்; பொய்யும் சூதும் களவும் இல்லாத வர்கள்; பக்தி நிரம்பியவர்கள்; தெய்வத்தன்மை பொருந்தியவர்கள். அவர்கள் அறியாதன இல்லை; அவ்வாறு யாதாயினும் இருக்குமாயி னும் அது அறியத்தகாததாகவேயிருக்கும். நாகரிக ஏணியின்படிக ளனைத்தையும் ஏறி மகோன்னதநிலையிலே அவர்கள் வாழ்ந்தார்கள். காலம் செல்லச்செல்ல, நாம் படிப்படியாகத் தாழ்மையுற்று, நாகரிகத் திலும் நலங்களிலும் குன்றிக் குறைவுபட்டுவருகிறோம். இப்போது நாகரிகஏணியின் கீழ்ப்படிக்கும் கீழேயிறங்கி, மிகவும் இழிவான நிலையை அடைந்துவிட்டோம். இந்த நிலையில், தெய்வம்வந்து கைதூக்கினாலன்றி நாம் சீர்குலைந்து முழுதும் அழிந்துபோவோம்' என்பது சிலர் கொண்டுள்ள அபிப்பிராயம். விஞ்ஞான ஆராய்ச்சி யாளர் இந்த அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளுவதில்லை. பெரும் பாலும் இதற்கு நேர்மாறான அபிப்பிராயத்தையே அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

---

*மயிலைத்தமிழ்ச்சங்கத்திற் செய்த பிரசங்கத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதியது.

இவ்வுலகம் தோன்றியகாலத்திலே இதில் உயிர் என்பதேயில்லை. பிறகு, வெகுகாலத்துக்குப்பின்பு, எப்படியோ எங்கிருந்தோ என்றோ உயிர் தோன்றிற்று. முதன்முதலில் தோன்றிய உயிர் சிறந்த உயிரினத்தைச் சார்ந்ததன்று. அது மிகவும் அற்பமானது. ஒரே ஒரு கண்ணறையை உடையதாயும், மிகவும் அற்பமாய் வாழ்வதாயும் உள்ள ஒரு சிற்றுயிரே அது. பிறகு, யுகங்கள் செல்லச் செல்ல, இவ்வுலகத்திலுள்ள சுற்றுப்பொருள்களாலும் இவ்வுலகத்தின் தன்மைகளாலும் சீதோஷ்ணநிலை முதலியவற்றாலும் அது தாக்குண்டு, சிறிதுசிறிதாக மாறுதல்களைப்பெற்று, வளர்ந்து, இனம்பெருகிவந்தது. இவ்வாறு பலவகையாய்ப் பலகாலமாய்க் கோணலும் மாணலுமாய்ப் பரிணமித்துவந்த அற்பமான உயிரானது பல்வேறு வடிவங்களைப்பெற்று, பலவகையான தாவரங்களாகவும் ஜங்கமப்பிராணிகளாகவும் உருவம் கொண்டது. இப்படித் தோன்றிய வடிவங்களுள் ஒன்றே மனிதன் பெற்றுள்ள வடிவம். இவ்வடிவத்தைப் பெற்றபின்னரும், மனிதன் எனப்படும் பிராணியின் உடலில், உள்ளும் புறமும், சிற்சில மாறுதல்கள் ஏற்பட்டுவந்திருக்கின்றன. இவை யாவற்றையும்பற்றி இவை நல்லவையென்றேனும் தீயவையென்றேனும் சொல்வதற்கில்லை. முதன்முதலில் தோன்றி வாழ்ந்த மனிதருக்கும் நமக்கும் சின்னஞ்சிறிய அளவில் எத்தனையோ உருவவேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆதிமனிதரைவிட நாம் உடல்வலிமையிற் குறைந்தவர்கள், ஆனால் அறிவில்—மூளைபலத்தில்—மிகுந்தவர்கள் என்று பொதுவாகச் சொல்லலாம்.

மிகமிகப் பழங்காலத்தில் வாழ்ந்தவர்கள் தங்கள் கண்களால் சீராகக் காணவில்லை, காதுகளால் சீராகக் கேட்கவில்லை. இயற்கை நிகழ்ச்சிகளை அவர்கள் செவ்வையாய் அறிந்துகொள்ளவில்லை. உடல் சிலிர்க்கும் பனிக்காலமும், மணங்கமழும் இளவேனிற்காலமும், கனிபழுத்துச்சொரியும் முதுவேனிற்காலமும், நிலம் குளிர்ந்து செழுமைபெற மழைபொழியும் மாரிக்காலமும் ஒன்றையொன்று அடுத்துவரும் இயல்பையுடையன என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. சுகமாக வாழ்வதற்குரிய வீடுகளை யியற்றும்வழி

யறியாதவர்களாய்க் கருவிகள் என்பனவற்றையே தெரியாதவர்களாய்க் குகைகள் என்று நாம் இழிவாகக்கூறும் வெயிலறியாப் பொந்துகளில் அறிவற்ற அற்பமான எறும்புகளைப்போலப் பேதை வாழ்க்கை வாழ்ந்துவந்தார்கள்.

அக்காலத்து மனிதருக்குத் தம்மைச்சுற்றிநிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தும் அற்புதமாயும் பயங்கரமாயும் தோன்றின. ஒவ்வொருநிகழ்ச்சியையும் ஒவ்வோர் அற்புதமாகவே அவர்கள் எண்ணிப் பாராட்டிப் பயந்து போற்றிவந்தனர்.

ஒருவேளையில் வானவெளியின் கீழோரத்திலே பொன்னிறமாக விளங்கிய தட்டு ஒன்று, வரவர இடம் மாறி நிறம் மாறிக் குணமும் மாறித் தலைக்குநேரே மேலே ஏறிநின்று, தாங்கமுடியாத சூட்டைத்தருவதும், மறுபடியும் இடம் பெயர்ந்து தாழ்ந்து, மறைந்துபோவதும் சொல்லொணு மனநிலைகளை அவர்களுக்கு உண்டாக்கிவந்தன. தலைக்குமேலே வீசியெறிந்த கல் திரும்பித் தரையில் வந்து விழுவதையும், குளத்துநீரில் எறிந்த கல் அவ்வாறு மீளாமல் மூழ்கி மறைந்துபோவதையும், நீர்ப்பரப்பின்மேல் வீசியெறிந்த மரக்கட்டை திரும்பவாராமலும் தண்ணீரில் மூழ்காமலும் மிதந்துகிடப்பதையும் கண்டு அவர்கள் முதன்முதலில் அடைந்த வியப்புக்குக் கணக்கில்லை. ஆயினும், இவற்றுள் சிற்சில, திரும்பத் திரும்ப ஓரே வகையாய்நடக்கக்கண்டு, அவர்கள் நாளடைவில் இந் நிகழ்ச்சிகளிலுள்ள சில ஒழுங்குகளை அறிந்துகொண்டார்கள். கல் நீருள் மூழ்கும், கட்டை நீரில் மிதக்கும், கட்டையும் கல்லும் அந்தரத்தில் ஆதாரமின்றி நிற்கமாட்டா என்பவை—அவை மீண்டும் மீண்டும் ஒரேவகையாய்நடக்கும் தன்மையைக்கண்டு உணர்ந்த காரணத்தினல்—அவர்கள் நாளடைவில் அநுபவவாயிலாக அறிந்து கொண்ட விஷயங்கள்.

எனினும், வேறு சிற்சில இயற்கைநிகழ்ச்சிகளைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. சில நிகழ்ச்சிகள் ஓரிடத்தில் நடப்பதுபோல் மற்ருேரிடத்தில் நடப்பதில்லை; ஒருசமயம் நடப்பதுபோல் மற்ருெரு சமயம் நடப்பதில்லை. உதாரணமாக: மழை

பெய்கிறது. மழைபெய்வதற்குமுன் மேகங்கள் கவிந்து சூழ்கின்றன; ஆனல் மேகங்கள் திரண்டபொழுதெல்லாம் மழைபெய்யக் காணேம்—என்? ஒருநாள் காலையில் மழைபெய்கிறது, ஒருநாள் நடுப்பகலில், ஒருநாள் இரவில்—என்? ஒருசமயம் குறைவாகப் பெய்கிறது. ஒருசமயம் வானமே நீர்க்கடல் ஆகிவிட்டதுபோல் கொட்டுகிறது-என்? ஒரு சமயம் கண்ணைப்பறிக்கும் காந்தியோடு மின்னல் மின்னுகிறது. காது செவிடுபட மனம் அச்சமுறப் பேரொலியோடு இடி முழங்குகிறது. அப்போது திடீரென்று ஒரு மரம் சடசடவென்று சாய்ந்துவிழுகிறது; அல்லது, பச்சைப்பசேலென்று தழைத்து ஓங்கிவளர்ந்திருந்த மரம் ஓரேவிநாடியில் கருகி உலர்ந்து பட்டை உரிந்துபோகிறது. அந்தமரத்தின்பக்கத்திலே, அதே உயரம், அதே பருமன், அதே செழுசெழுப்பு, அதே பசுமை இவற்ரேடுகூடிய மற்ற மரங்கள் யாவும் முன்போலவே தம் இளந்தளிர்களைக் காற்றில் அசைத்துப் பூத்து, மணமும் கனியும் சொரிந்து நம்மை மகிழ்விக்கின்றன—என்? இதோ இந்தப் பௌர்ணமியன்று நீலமான வானத்திலே சந்திரன் பிரகாசிக்கிறது; உருக்கிவார்த்த வெள்ளிபோல நிலவுபொழிகிறது. அடுத்த பௌர்ணமியன்று அதேநேரத்தில் எங்கும் ஆனந்தமயமான சந்திரகிரணங்கள் அமிர்தம்போலப் பொழிந்துகொண்டிருக்கும்நேரத்தில் வானவெளி வரவர இருளுகிறது. சந்திரபிம்பம் சிறிதுசிறிதாக மறையத்தொடங்கி, இருக்கும் இடமே தெரியாமல் மறைந்துவிடுகிறது. சந்திரோதயம் இல்லாத அமாவாசையாகவே பௌர்ணமி மாறிவிட்டதுபோலத் தோன்றுகிறது. மீண்டும் சிறிதுநேரத்தில், 'உலகத்துக்கு என்ன கேடுவந்துவிட்டது? நாம் என்ன தீங்கு செய்தோமோ?' என்று மக்கள் தயங்கித் தவிக்கும்வேளையில் வரவர இருள்நீங்கிச் சந்திரபிம்பம் முன்போலத் தோன்றி நிலவளிக்கிறது-என்? அக்காலத்திலே வாழ்ந்துவந்த மக்கள் இந்நிகழ்ச்சிகளில் யாதொரு ஒழுங்கையும் காண இயலாமல் திகைப்படைந்தார்கள். அறியாமை மிகுந்திருந்த இக்காலத்தை அஞ்ஞானயுகம் என்று சொல்லலாமல்லவா?

ஆயினும், மனிதன் அறிவுபடைத்தவன், மூளைத்திறம் உடையவன். ஆதலால் இவ்வாறு முரண்படும் இயற்கைநிகழ்ச்சிகளை

அவன் அறிய முயன்றான். பலவகையாய் யோசித்துப் பார்த்தான். மழையும், மின்னலும், மேகமும், சந்திரனும் ஏன் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருமாதிரியாக நடக்கின்றன என்று ஆலோசித்து இவற்றின் உண்மையைத் தெரிந்துகொள்ள முயன்றான். 'ஏன் இவை இவ்வாறு நடக்கக்கூடாது? நாமும் இவ்வாறுதானே நடக்கிறோம். ஒரு நாள் நாம் காலையில் விழித்துக்கொள்கிறோம்; மற்றொருநாள் தூங்குகிறோம்; நம்முடைய இஷ்டப்படி இந்த மரத்தையோ அந்த மரத்தையோ வெட்டுகிறோம்; ஒருசமயம் உரக்கப் பேசுகிறோம்; ஒருசமயம் மெதுவாகப் பேசுகிறோம்; ஒருசமயம் வீட்டுமறைவில் ஒதுங்குகிறோம்; ஒருசமயம் வெளியில்வந்து உலாவுகிறோம். நாம் நம்முடைய இஷ்டம்போல் இவ்வாறு நடப்பதைப் போலவே மேகமும், மழையும், சந்திரனும் தம் இஷ்டம்போல் நடக்கின்றன. இவ்வாறுதான் இது இருக்கவேண்டும்' என்று முடிவுகட்டினான். ஆதலால் இவற்றுக்கெல்லாம் உயிரைக் கற்பித்தான். இவைகளை நல்ல தெய்வங்களாகவோ கெட்ட தேவதைகளாகவோ பாவித்து, இவைகளுக்கு நல்ல மனத்தையும் கெட்ட மனத்தையும் கொடுத்து, தான் எவ்வாறு—தன் மனம்போனவாறெல்லாம்—நடக்கிறானோ அவ்வாறே இவையும் யாதொரு நியதிக்கும் ஒழுங்குக்கும் உட்படாது, தம்முடைய மனம்போனவாறெல்லாம்—விருப்பு வெறுப்புக்களுக்கும், கோபதாபங்களுக்கும், மற்றைய மனநிலைகளுக்கும் உள்ளாகி—நடப்பவைகளாகவே கற்பித்துக்கொண்டான். ஆதலால், பழங்காலத்திலே ஒவ்வொரு இயற்கைப்பொருளுக்கும் நிகழ்ச்சிக்கும் தோற்றத்துக்கும் அதிஷ்டான தேவதைகள் மனிதனால் சிருஷ்டிக்கப்பட்டன. மழையும், வெயிலும், காற்றும், நெருப்பும், நிலமும், கடலும், மலையும் தெய்வங்களாயின. இந்திரனும் சந்திரனும் ஒவ்வொரு தேசத்திலும் வெவ்வேறு பெயர்களோடு தோன்றித் தெய்வங்களாக விளங்கினார்கள். ஆனால், கலப்பற்ற உயர்ந்த தெய்வத்தன்மையோடு அவர்கள் விளங்கவில்லை. உதாரணமாக, கிரேக்க தெய்வங்களை எடுத்துக்கொண்டால், அவர்களுடைய தெய்வத்தன்மை மனிதத்தன்மையாகவேவந்துமுடிந்தது. சிற்சில வேளைகளில் மிகவும் மாசுற்ற கீழ்த்தர அறிவும் மனமும் உடைய மனிதத்தன்மையையுடைய

வர்களாகவே அவர்கள் கற்பிக்கப்பட்டார்கள். மனிதசமூகத்தின் நன்மையை நாடி, இக்காலத்தில் மனிதர் மனிதர்மீது பிரயோகிக்கும் சட்டதிட்டங்களையும் தண்டனைகளையும் கிரேக்க தெய்வங்களின் மீது நாம் பிரயோகிப்பதாயிருந்தால், அவர்கள் எல்லாருக்கும் அநேகமாகத் தூக்குத்தண்டனையும், தீவாந்தரசிட்சையுமே தண்டனைகளாக இடவேண்டிவரும். மற்றையநாட்டுத் தெய்வங்களின் நிலைமைகளும் பெரும்பாலும் இவ்வாறே. இவ்வாறு அரைகுறையாய் அறிந்த விஷயங்களைக் கற்பனைக் கண்களாற் பார்த்து அவற்றைக்குறித்துப் பலவகையாக எண்ணங்கள்கொண்ட நீண்ட காலத்தை அபிப்பிராயயுகம் என்று சொல்லலாம்.

இப்படி வெகுகாலம் சென்றபிறகுதான் இயற்கைநிகழ்ச்சி ஒவ்வொன்றுக்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கிறது என்பது தெரியவந்தது. சிறிது சிறிதாகத் திவலை திவலையாக அறிவூற்று ஊறிக் கசிந்துவந்தது. அறிவின் தொகுதி திரளத்திரள, ஆராய்ச்சித்திறமை மிக மிகக் காரணம் இன்றி இயற்கையில் யாதொரு செயலும் நடப்பதில்லை என்பதை மனிதர் உணரலாயினர். இதினின்று காரணகாரியத்தொடர்பு என்னும் இயற்கைவிதி ஒன்றை அவர்கள் தெரிந்துகொண்டார்கள். தாம்கண்ட விஷயங்களைக் கவனித்தார்கள். ஒழுங்குபடுத்தி அவற்றைக் குறித்துக்கொண்டார்கள். மேன்மேலும் அவற்றைப்பற்றி 'ஏன்? எப்படி? என்ன?' என்றெல்லாம் சிந்தித்தார்கள். சோதனைகளைச்செய்தார்கள். இயற்கையில் நிகழும் நிகழ்ச்சிகளைப்போன்ற பலவற்றைத் தாமும் நிகழ்த்தினார்கள். இயற்கையிற் காணும் பொருள்களோடு ஒத்த பொருள்களைத் தாமும் இயற்றினார்கள். இயற்கையில் இல்லாப் புதுப் பொருள்களையும் நாளடைவில் இயற்றத் துணிந்தார்கள். அறிவும் திறமையும் மேன்மேலும் நிரம்பின. விஞ்ஞானயுகம் தோன்றிவிட்டது.

ஆயினும், நம்முள் பலர் அதன் வருகையை இன்னும் முழுதும் உணரவில்லையென்றே தோன்றுகிறது. இதற்கு ஒரு காரணம் உண்டு. அதை ஓர் உதாரணத்தால் தெளிவாக்கலாம். கடலினுள்ளே வாழும் மீன்கள் தம்மைச் சுற்றியுள்ள தண்ணீர்ச்செறிவை

உணருவதில்லை. அதைப்போலவே, நாமும் குறைந்தது நூறு மைல் ஆழமுள்ள வாயுக்கடலின் அடிப்புறத்தே வாழ்ந்தபோதிலும், நம்மைச்சூழ்ந்துள்ள வாயுச்செறிவை உணருவதில்லை. வாயுமண்டலம் இல்லாவிடில் நம்மால் உயிர்வாழமுடியாது. ஆயினும், இந்த நிலைமையிலும் அதன் உண்மையை நாம் சாதாரணமாக உணருவதேயில்லை. சிற்சில வேளைகளிற் கடற்கரையிற் குளிர்ந்த தென்னந்தோப்பில் இளங்காற்று மெல்லென வீசுகிறது. நீலக்கடலின் பரப்பிலே வெள்ளிக்கிரீடம் தரித்த அலைகள் தாவிக்குதித்து இசையோடு நர்த்தனம் செய்கின்றன. மெல்லிய உடலையுடைய தென்னை மரங்கள் தமது மரகதக்கைகளாற் பலவகையான அபிநயங்கள் பிடித்து நடனமாடுகின்றன. 'ஆ! என்ன ஆனந்தம்! தென்றலின் இனிமைக்கு ஈடுண்டோ!' என்று அகமகிழ்ந்து நாம் தென்றலைக் கொண்டாடுகிறோம். வேறுசில வேளைகளிற் புயற்காற்றெடுத்துப் பேரிரைச்சல் போடுகிறது. கொந்தளிக்கும் கடல் இடியைப்போல் முழங்குகிறது; ஆயிரக்கணக்கான பாம்புகள் கோபித்தெழுந்து சீறுவதைப்போற் சீறுகிறது. மலைபோலக் கிளம்பிய அலைகள் சீற்றத்தோடு கரையின்மேல் மோதிப் புடைத்து அதைத் தூள்தூளாக்குகின்றன; பாறைகளை இடித்துத் தகர்த்தெறிகின்றன. கரையோரத்திலுள்ள தென்னைமரங்கள் தலைவிரிகோலமாக ஆடி, அலறிப் புடைத்துத் தரைமேல் விழுகின்றன. தென்றலைப் புகழ்ந்த நாவினாலேயே, 'ஆ! என்ன கொடுமை! யாருக்குவேண்டும் இந்தக் காற்று?' என்று காற்றை மிகவும் வெறுத்துப்பேசுகிறோம். விஞ்ஞானவிஷயத்திலும் இவ்வாறே.

உயிரளிக்குங்காற்றானது எங்கும் நிறைந்துகிடப்பதுபோல் "விஞ்ஞானமும்" நமது தினசரிவாழ்க்கையில் ஒவ்வொருபகுதியிலும் நிரம்பிக்கிடக்கிறது. ஆயினும், அதை நாம் உணருவதில்லை. அதிக அளவில் நன்மையேனும் தீமையேனும் அதனால் விளையும் போதுமட்டிலும் அதைப்பற்றி நாம் நினைக்கிறோம். அதைப் புகழ்கிறோம்; அல்லது குறைகூறிப் பழிக்கிறோம்.

விஞ்ஞானயுகத்திலே நாகரிகவாழ்க்கைபுரிந்துவரும் நாம் கோழிகூவக் கண்விழிப்பதில்லை; புள்ளினம் சிலம்பப் படுக்கைவிட்டெழுவதில்லை; எந்திரசக்தியால் ஓடும் கடியாரம் நம்முடைய தலைமாட்டிலே கணீரென்று ஓசைப்படுத்த நாம் துயில் கலைந்து விழித்தெழுகிறோம்; எந்திரசக்தியால் இயற்றப்படும் மின்சார சக்தியால் பிரகாசிக்கும் மின்சாரவிளக்கை ஏற்றுகிறோம்; எந்திரசக்தியால் நமதுவீட்டில் வந்துசேரும் குழாய்த்தண்ணீரில் உடல் கழுவிக் குளிக்கிறோம்; எந்திரசக்தியால் அச்சிடப்பட்ட பத்திரிகைகளையும் புத்தகங்களையும் படிக்கிறோம்; எந்திரசத்தியாற்செய்த பாத்திரம் பண்டங்களை வீட்டில் வழங்குகிறோம். காப்பிக் கொட்டையை வறுப்பது ஓர் எந்திரம். அதைத் திரிப்பது மற்றோர் எந்திரம். எந்திரசக்தியால் ஓடும் வண்டிகளில் ஏறித் தொழிலுக்குச் செல்கிறோம். ரேடியோவும், கிராமபோனும், தந்தியும், தபாலும் எந்திரசக்தியையே ஆதாரமாக உடையவை. எந்திரங்கள் யாவற்றையும் ஆக்கியும் இயக்கியும் அவற்றுக்கெல்லாம் மூலாதாரமாக உள்ளது விஞ்ஞானந்தானல்லவா?

இவை யாவும் சாமானியமானவையல்ல, விசேஷ நிகழ்ச்சிகள் என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆதலால் இவற்றை விட்டுவிட்டு மிகவும் சாதாரணமான ஒரு விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். நம்நாட்டில் அடுக்களையில்லாத வீடு கிடையாது. ஒவ்வொரு அடுக்களையும் ஒரு விஞ்ஞான நிலையம். அதில் வேலைசெய்யும்—அல்லது வேலையை மேற்பார்க்கும் — பெண்களெல்லாரும் விஞ்ஞானிகள் என்று சொன்னால் ஒப்புக்கொள்வீர்களா? மாட்டீர்களா?

அடுப்பின் அமைப்பில் எவ்வளவு விஞ்ஞான அறிவு பயன்பட்டிருக்கிறது தெரியுமா? முக்கட்டிகளை வைக்காமல் அடுப்புக்குச் சுவர்வைப்பது ஏன்? அடுப்பைக் களிமண்ணால் அமைப்பது ஏன்? அதற்குக் கொம்மை வைப்பது ஏன்? அடுப்பின்பக்கத்திற் கொடியடுப்புப் போடுவதின் தத்துவம் என்ன? அடுப்பில் விறகைவைக்கும் பொழுது அதற்கு அடியிற் சிறு கல்லையோ அல்லது செங்கற்றுண்டையோ வைத்துக் கொள்ளிமுனையை உயர்த்துவது ஏன்?

இனிச் சமையல்விஷயங்களைச் சற்றே பார்ப்போம். எரியும் அடுப்பில் வெண்கலப்பானையை ஏற்றும்போது அதற்குள் தண்ணீர் விடாமல், அது காய்ந்தபிறகே அதில் தண்ணீர்விடுவது ஏன்? ஈயப்பானையை அடுப்பில் வைக்கும்பொழுது அதற்குள்ளே தண்ணீர்விடாமல் வைப்பதில்லையே! அது ஏன்? கறிகாய் முதலிய வற்றை வேகவைக்கும்பொழுது உப்புப்போட்டு வேகவைத்த போதிலும், பருப்பை வேகவைக்கும்பொழுது உப்புப்போடாமல், அது வெந்தபிறகே உப்புப்போடுவது ஏன்? அடுப்பில் வைத்த விறகு கொழுந்துவிட்டெரியாமல், புகைந்து நேரே எரியவில்லை யானால், ஊதுகுழலை வாயில்வைத்து அடுப்பு ஊதுவது ஏன்? குடிக்கும் தண்ணீரை மண்பானையில், இருண்டமூலையில், மணலின்மேல் வைப்பது ஏன்? அந்தப் பானையின்மேல் ஈரத்துணியைப் போர்த்துவது ஏன்? ஈயம் பூசாத பித்தளைப்பாத்திரத்தில் குழம்பு, ரஸம், மோர் போன்றவைகளை ஊற்றிவைப்பதில்லையே! ஏன்? பாத்திரங்களைத் துலக்கப் புளியையும், அதன்பின்பு சாம்பலையும் உபயோகிப்பது ஏன்? பாலுக்கு உறைகுத்த மோரை உபயோகிப்பது ஏன்? காய்ச்சிய பால் நல்ல சூடாயிருக்கும்பொழுதும் உறைகுத்தாமல் ஆறிக் குளிர்ந்து சில்லிட்டுப்போனபிறகும் உறைகுத்தாமல் வெதுவெதுவென்ற சூடாயிருக்கும்போது உறைகுத்துவது ஏன்?

இப்படிக் கேள்விகளை அடுக்கிக்கொண்டேபோகலாம். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விஞ்ஞானதத்துவம் அடங்கிக்கிடக்கிறது. பௌதிகசாஸ்திரதத்துவங்களும் இரசாயனசாஸ்திரதத்துவங்களும், உயிர்நூல் தத்துவங்களும் நம்முடைய வீட்டு அடுக்களையில் எவ்வளவு பயன்பட்டிருக்கின்றன!

நாம் தக்கவாறு விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தினால், மின்சாரத்தைத் துணையாகக்கொண்ட அடுப்புக்களை உபயோகிக்கலாம். இவற்றை உபயோகித்தால் கண் காந்த, கண்ணிலும் மூக்கிலும் நீர் பெருக, வாய்நோவக் குனிந்து ஊதி, அடுப்புப்பற்றவைக்கும் சிரமம் இராது. கை நோவ, இடுப்புக்கடுக்க, முகம் வியர்க்க, மேலெல்லாம் சாம்பல் படிய, அடுப்பைச் சுத்தம்செய்யுங்கஷ்டமும் இராது. சமையல் அறையிலே புகையும் கரியும் தூசியும் ஒட்டடையும்

இரா. வேலையும் வெகு சீக்கிரம் ஆகிவிடும். சமையல் வேலை உல்லாச வேலையாகக்கூட ஆகிவிடும். ஆனால் செலவு அதிகமாகத் தான் ஆகும்.

இவ்வாறு நமது தினசரிவாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாயும், நமது அடுக்களையிலேயே புகுந்துவிட்டதாயும் உள்ள விஞ்ஞானம் ஒவ்வொருநிமிஷமும் 'உயர்ந்தவர்க்கு உதவிப உதவியை ஒப்ப' ஓங்கிவளர்ந்து உலகத்திலுள்ள ஒவ்வொரு துறையிலும் புகுந்து வியாபித்திருக்கிறது. ஆயினும், சிலர் 'விஞ்ஞானம் தீமை விளைப்பது, அது முற்றிலும் தீது; அது முன்னேறுவது அவசியமேயன்று, தீயோர்நட்புப்போல் அதன் வளர்ச்சி என்றென்றும் தீங்கையே விளைவித்துக்கொண்டிருக்கும்' என்று குறை கூறுகிறார்கள். உண்மையில் விஞ்ஞானம் நன்றா? தீதா?

வலிமிக்க பஸ்மாசுரன் தவஞ்செய்தான். தெய்வம் மனமகிழ்ந்து 'நீ கேட்டவரத்தை அளிப்பேன்' என்றது. 'யார்தலையில் நான் கையைவைத்தாலும் அவர் உடனே நீறாய்ப்போகவேண்டும்' என்று அவன் வரங்கேட்கவே, தெய்வமும் அவ்வரத்தை அருளிற்று. 'உன் தலையிலேயே கையைவைத்துச்சோதிப்பேன்' என்று பஸ்மாசுரன் கூறித் தனக்கு வரமளித்த தெய்வத்தையே அழிக்க முயன்றான். அத்தெய்வமும் அஞ்சி ஓடவேண்டியதாயிற்று. இறுதியில் தானே தன்தலையிலே கையைவைத்துக்கொண்டு அவன் மடிந்தான்.

இராவணன் கும்பகருணன் விபீஷணன் ஆகிய மூவரும் நற்குலத்திலே தோன்றியவர்கள், கற்றுணர்ந்தவர்கள். மூவரும் தவஞ்செய்தார்கள். மனிதரை இகழ்ந்த இராவணன் தான் கேட்டவரம் பெற்றான். தேவர்களைப் பூண்டோடு அழிக்கவிரும்பிய கும்பகருணன் தன்னுடைய லக்ஷியம் தவறி நித்திரையைப் பெற்றான். அவர்கள் இருவரும் சிலகாலம் சிறந்து வாழ்ந்தார்கள். இறுதியில் அழிந்துபோனார்கள். தெய்வபக்தி ஒன்றையே நாடித் தவஞ்செய்த விபீஷணனே அரசு பெற்றான், சாகாமையும் பெற்றான்.

பஸ்மாசுரன் இராவணன் கும்பகருணன் போன்றவர்களைக் கொண்டு தவத்தைக் குறைகூறுபவர் யாருமில்லை. அவர்கள் தீய வழிச்சென்றது தவத்தின்குறையன்று; அவர்களுடைய மனநிலையின் குறையேயாகும்.

ஏலாமை நன்றீதல் தீதுபண் பில்லார்க்குச்
சாலாமை நன்றுநூல் சாயினும்—சாலாமை
நன்று தவநனி செய்தல் தீ தென்பாரை
இன்றுகா ரியாங்கண் டிலம். (சிறுபஞ்சமூலம் 61)

தவத்தைப்போன்றதே விஞ்ஞானமும். தவத்தைப்போல் விஞ்ஞானமும் ஆற்றல் அளிப்பது; வாழ்க்கையை மேன்மைப் படுத்துவது. நம்முடைய மனநிலைக்கு ஏற்ப அதை நன்மைக்கோ தீமைக்கோ நாம் பயன்படுத்தலாம். நம்முடைய மனத்தை நாம் பண்படுத்திச் சீரிய மனநிலையை அடைவோமானால், இவ்வுலகத்தை நரகத்துக்கு ஈடாக்கும் வறுமையையும் பிணியையும் விஞ்ஞானத்தால் நமக்குக் கிடைக்கும் சக்தியைக்கொண்டு பெரும்பாலும் நீக்கிவிடலாம்.

விஞ்ஞான வளர்ச்சியோடொத்து மனிதர் தம்முடைய அறிவையும் குணங்களையும் சீர்திருத்திக்கொள்ளாமல், வல்லமைமிக்க சக்திகளையெல்லாம் தீயவழிகளிற் பயன்படுத்தி, ஒருவரையொருவர் அழிப்பதிலேயே கருத்தாயிருந்தால், மிகவும் இனிமையாகவும் அழகாகவும் நடைபெறவேண்டிய வாழ்க்கையின் நிலை மிகவும் பரிதாபகரமாகிவிடும். மகோன்னதமாய்ச் சிறப்புற்றுவிளங்கிய பழங்கால நாகரிகங்கள் பல அழிந்துபோனதைப் போலவே, நமது நாகரிகமும் கரிந்து பாழாய்ப்போய்விடும்.

ஆதலால் வாழ்க்கையை விஞ்ஞானத்தாற் பண்படுத்தவேண்டும். கேவலம் மிருகங்களைப்போல் உயிர்வாழ்வது வாழ்க்கையாகாது. உயர்ந்த லக்ஷியங்கள் உடையதாய்ச் சிறந்த உணர்ச்சிகள் உடையதாய்த் துன்பங்கள் குறைந்ததாய் இன்பங்கள் மிகுந்ததாய் உள்ள வாழ்க்கையே வாழ்க்கை என்று கூறத்தகுவது.

தவளையை அறுப்பதையும், பூதக்கண்ணாடியைக்கொண்டு பூச்சிகளை ஆராய்வதையும், துர்நாற்றம் வீசும் சோதனைச்சாலைகளில் திராவகங்களைக்கொண்டு பலவகையான சோதனைகளை நிகழ்த்துவதையுமே விஞ்ஞானம் என்று பலர் நினைத்துவருவது முற்றிலும் தவறு. விஞ்ஞானம் என்பது ஆராய்ந்து வகுத்து ஒழுங்குபடுத்திய அறிவு. அற்பமாகத் தொடங்கிய இது இப்போது செழித்து நன்றாகப் பின்னிய பலகிளைகளாகப் பிரிந்துவிட்டது. ஒவ்வொரு தனிவிஷயத்தைப்பற்றிய அறிவு ஒரு விஞ்ஞானமாக வளர்ச்சியடைந்துவிட்டது.

விஞ்ஞானம் என்றால் ஒழுங்குபடுத்திய அறிவு என்று சொல்லியதிலிருந்து விஞ்ஞானமுறையில் அறியப்படும் ஒன்றுதான் அறிவு என்று நினைக்கலாகாது. எந்த விஞ்ஞானியும் இப்படி நினைப்பதில்லை. மலையையும் ஆற்றையும் மேகங்களையும் பசும்புல்லையும் நாம் காண்கிறோம்; அவற்றை அறிகிறோம். ஆனால் எப்பொழுதுமே இவ்வறிவு பூதத்துவசாஸ்திரமாயேனும், தாவரசாஸ்திரமாயேனும், இரசாயனசாஸ்திரமாயேனும்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. தாயைப்பற்றிய அறிவு, குழந்தையைப்பற்றிய அறிவு முதலியன உயிர்த்தத்துவசாஸ்திரத்தை ஒட்டியதாகவே இருக்கவேண்டும் என்பதில்லை. ஆராய்ச்சியிற் போலவே சிந்தனையினாலும் அறிவு கிட்டுவதுண்டு என்பதற்கு ஒவ்வொரு நாட்டிலுமுள்ள இருடிகளும் தீர்க்கதரிசிகளும் சான்றுகளாக இருந்துவருகிறார்கள்.*

---

* இதை ஜே. ஏ. தாம்ஸன் (J. A. Thomson) என்பவர் பின்வருமாறு கூறுகிறார்:—

It must be understood that there are other kinds of knowing, besides scientific knowing. We know the country-side we love, not only by studying its Geology and Meteorology, its Botany and Zoology, but by appreciating its beauty. It is not a scientific knowledge that we have of our mother or our friend. Scientific knowledge is gained by observation and experiment and by reflection on the merits of these. But it would be very high-handed to maintain that the philosophers and sages have gained no knowledge by pondering over the possible meaning of the world and man's place in it.

விஞ்ஞானங்களைப் பௌதிகசாஸ்திரங்கள் என்றும் மானுஷிக சாஸ்திரங்கள் என்றும் இரண்டுபிரிவுகளாகப் பிரிக்கலாம். இரசாயனம், எந்திரசாஸ்திரம் போன்றவை பௌதிகசாஸ்திரங்கள். இவை பொதுவாகப் பொருள்களின் தன்மைகளையும் அவற்றை வசப்படுத்தி ஆண்டு பயன்படுத்தும் முறைகளையும் அறியமுயலுபவை. சமூகநூல், உளநூல், உயிர்நூல், வைத்தியநூல் முதலியவை மானுஷிகசாஸ்திரங்கள் என்று கூறத்தக்கவை. இவை வாழ்க்கைத்தத்துவங்களையும் நிகழ்ச்சிகளையும் அறியமுயலுபவை. சிறிதுகாலத்துக்குமுன்வரை பௌதிகசாஸ்திரங்களின்வளர்ச்சியே பிரதானமென்று அறிஞர்பலரும் கூறிவந்தார்கள். அவ்வளர்ச்சியால் நூற்றுக்கணக்கான புதுப்பொருள்கள் கிடைத்துவருவதையும், போக்குவரவுசாதனங்களும் பிற சௌகரியங்களும் மிக நன்ருய் அமைந்துவருவதையும் கண்டு அவ் விஞ்ஞானசாஸ்திரங்களை அவர்கள் மிகவும் போற்றிவந்தார்கள். ஆனால் இப்போது இந்த மனநிலை சற்று மாறியிருக்கிறது. ஏனெனில், பௌதிகசாஸ்திரங்களின்வளர்ச்சிகாரணமாக நம்முடைய சமூகவாழ்க்கை அடியோடு மாறிவிட்டது; நாம் வெகுகாலமாகப் பின்பற்றிவந்த கொள்கைகளும் நாம் கொண்டிருந்த அபிப்பிராயங்களும் மிகப் பெரிய சந்தேகங்களுக்கு உள்ளாகிவிட்டன. நம்முடைய லக்ஷியங்கள்கூடப் புரண்டுவிட்டன. ஆயினும், இவ்வளர்ச்சியானது இன்றுவரை நமது சமூகவாழ்க்கையைச் சீர்பெற அமைக்க உதவவில்லை; உறுதியான புதியகொள்கைகளை நமக்கு அளிக்கவில்லை; சீரிய லக்ஷியங்களை இன்னும் நமக்குத் தோற்றுவிக்கவில்லை.

சிலகோடீசுவரர்களின் இடையே லக்ஷக்கணக்கான ஜனங்கள் என்றும் நீங்காத வறுமையில் வாடி வருந்துகிருர்கள். மனித இயல்பை மிருகத்தன்மையுள்ளதாகச்செய்யும் வாழ்க்கைப் போராட்டமானது முன்னிலும் மும்முரமாகவே நடந்துவருகிறது. நகரத்தில் வாழும் மக்கள் அமைதி என்பதையே உணராதவர்களாய்க் கர்ணகடோரமான நூற்றுக்கணக்கான ஓசைகளின்

இடையே பரபரத்து மனங்குழம்பி உழல்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபுறமும், வேலைகிடைத்தவர்களின் அளவுகடந்த முயற்சி மற்றொருபுறமுமாக மக்களின் மனநிலையைக் கலக்கி, அவர்களின் உடலையும் பலவகையான புதிய நோய்களுக்கு இலக்காக்குகின்றன. பலவகையான கொடும்பிணிகளும் பேராபத்துக்களும் எதிர்பாராத வேளைகளில் தோன்றிவருதலால், இவற்றால் விளையும் கவலைகளும் எண்ணிறந்தவை. அரசியல்-நிலைகளின் மாறுபாடுகளால் எல்லாத்தேசங்களிலும் இப்பொழுது காணப்படும் மனக்குழப்பத்துக்கு ஒரு வரம்பேயில்லை. அதிகாரத்திமிரால் விளையும் கொடுமைகளும், தேசபக்தி சமூகச்சீர்திருத்தம் என்னும் பெயர்களை ஆதாரமாகக்கொண்டு இயற்றப்படும் தீமைகளும் பலவாகும். இவற்றைத் தவிர, என்றென்றும் நம்மைவிட்டு நீங்காக் கவலைகள் இருக்கவே இருக்கின்றன. தினசரிவாழ்க்கையைப் பற்றிய கவலைகள், ஆண் பெண் என்னும் இயற்கைப் பாகுபாட்டை யொட்டிய வழக்குக்கள், கல்விமுறைகளையும் கல்வி விஷயங்களையும் பற்றிய விவாதங்கள், மதத்தைப்பற்றிய சந்தேகங்களும் பிடிவாதங்களும் வேற்றுமைகளும்—இவை யாவுமாகச் சேர்ந்து இக்காலத்தில் நமக்கு ஓயாத வேதனையைத் தந்துகொண்டேயிருக்கின்றன. இத்துறைகளுள் ஒவ்வொன்றையும் புதிய அறிவோடு பாரபக்ஷமின்றி ஆராய்ந்து, உரிய பரிகாரங்களைத் தேடினாலன்றிச் சமூகம் சீர்குலைந்துபோகும்.

இந்தநிலையில் நாம் செயலற்றுத் தெய்வமேகதியென்று சும்மா இருத்தல் கூடாது. நம்மால் இயன்றவரையில் நம்முடைய சமூகத்தின் சீர்கெட்டநிலையைத் திருத்தமுயலுவது அவசியம். அரசியற் கக்ஷிப்பிரதிகக்ஷிகளையும், ஜாதி மதம் நிறம் என்னும் வேறுபாடுகளையும் ஒதுக்கிவிட்டு, விஞ்ஞானமனநிலையோடு சோதித்து ஆராய்ந்து அறிந்து, அவ்வறிவைச் சீராய்ப் பயன்படுத்தினால், சமூகம் சீர்திருத்தம் அடையும். வாழ்க்கையும் மேன்மையுறும்.

உண்மையின்மீது அளவிலாப்பற்றும் எடுத்துரைக்கும் முறையில் எச்சரிக்கையும் அளவும் (ஸத்யாப ஜிதஹாஷிணாம்) காட்சியில் தெளிவுமே விஞ்ஞானமனநிலையின் லக்ஷணங்கள் என்று சொல்லலாம். உணர்ச்சிகளின் காரணமாக நடுநிலைகோணுமல், சீராக அறிந்த உண்மைகளைச் சிறிதும் வழுவவிடாமல், அவற்றினின்றே பக்ஷபாதமின்றி முடிவுகட்டும் மனநிலையே விஞ்ஞான மனநிலையாகும். நீதிமன்றத்திலே நீதியை நாடிவருபவன் எந்த நிறத்தையுடையவன், எந்த நாட்டிற் பிறந்தவன், எந்த மதத்தைப் பற்றுபவன், எந்தக்கக்ஷியை ஆதரிப்பவன், எந்தவகுப்பைச்சேர்ந்தவன் என்னும் விஷயங்களைத் தம்முடைய மனத்திற் சிறிதேனும் புகவிடாது, எல்லா மனிதரையும் ஒரேவிதமான மனநிலையோடு நோக்கி, நீதியை வழங்குவதே சிறந்த மனநிலையையுடைய நீதிபதிக்கு அறிகுறி. விஞ்ஞான மனநிலை இதனினும் உயர்ந்தது.

உண்மை விஞ்ஞானியானவன் புழுவையும் மனிதனையும் பிரபஞ்சத்தையும் ஒரேவகையான மனநிலையோடு, ஒரேகண்ணோடு விருப்பு வெறுப்பின்றிச் சீர்தூக்குவான். அற்பப் புழுவை அருவருத்து ஒதுக்கமாட்டான்; அளவில் அடங்காப் பிரபஞ்சத்தைக் கண்டு அஞ்சமாட்டான்; மனிதனைத் தன்னினமே யென்று பக்ஷபாதமாய் நடத்தமாட்டான். இவ்வாறு நிகழ்ச்சிகள் பொருள்கள் யாவற்றையும் ஒரேவகையான உணர்ச்சியோடு சமமாய்ச்சீர்தூக்கி நோக்கும் மனநிலையைக் கடவுட்பொதுநோக்கு (God's-eye-view) என்று சிலர் கூறுகிறார்கள்.

விஞ்ஞானத்தினுல் விளையும் பயன்கள் யாவற்றினும் இதையே மேன்மையானதாகக் கருதுவது தகும். மக்களிற் பெரும்பாலார் இந்த மனநிலையையடைவார்களானுல் இப்போது காணப்படும் விவாதங்கள் யாவும் ஒழிந்துபோகும். அரசியல்துறையிலும், ஆராய்ச்சித்துறையிலும், பாஷை, இலக்கியம், இசை, மதம்

சட்டம் முதலிய துறைகளிலும் இப்பொழுது தோன்றி, எற்கெனவே பிளவுபட்ட சமுகத்தை எண்ணிறந்த சின்னஞ்சிறுகூறுகளாகத் தகர்த்தெறியும் விவாதங்களுள் ஒன்றுக்கும் இடம் இராது. மனிதன் தெய்வத்தன்மைபெற் றுயர்ந்து, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் கொள்கையை உண்மையாகவே பின்பற்றி, உலகம் அனைத்தையும் ஓர்குலமாகக்கருதி இன்புற்றுவாழ்வதற்கு இம் மனநிலையானது இன்றியமையாததாகும். செம்மையான இம் மனநிலையை அளிக்கவல்லது விஞ்ஞானம். வேறெந்தப்பயனும் அதற்கு இருப்பினும், இல்லாவிடினுமே, இந்த ஒரு பயனின் பொருட்டேனும் விஞ்ஞானம் பாராட்டற்குரியது. போற்றிவளர்க்கத்தக்கது. அறிவாளிகளுக்குள்ளே இம் மனநிலையானது மேன்மேலும் வளர்ந்துவரக் காண்கிறோம்.*

இனி ஒவ்வொருதுறையாக எடுத்துக்கொண்டு பார்ப்போம்.

[தொடரும்]

---

* Science unveils a new universe of possibilities; it creates a new order of values; it demands another way of living. With its vast concept of being we may cast a new mould for the shaping of action. For there is an intrinsic beauty in the architecture of scientific thought, an intrinsic worth in acquiring its realistic type of thinking a superb ethical discipline in the impersonal quality of its ends. *To spread the scientific spirit in the community is a need of the first importance. We must infuse the neutrality of Science into the partiality of human affairs.* We must leaven the mentality of our age, still heavy with archaic and individualistic modes of thought, with the rationale of science. How else, if not by such an attitude, can the supremely urgent innovations so patiently contrived by the human sciences be made available?

*Human Affairs.*

# பண்டைத்தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

[உ௩௪-ஆம் பக்கத் தொடர்ச்சி]

இனி, தமிழ்ப்பட்டணங்களான மொஹெஞ்சோதரோ, ஹரப்பா என்னும் இவை இரண்டிலும் அக்கால நாகரிகநிலையை ஸர் யோன் மார்ஷல், டாக்டர் E. J. H. மக்கே, ராவ்பகதூர் K. N. தீக்ஷித் என்பவர்களுடைய நூல்களைப் பின்பற்றி ஒருவாறு சுருக்கிக் கூறுவோம்.

முன்பு இவ்விரண்டுபட்டணங்களிலும் நகாமைக்குந்திறமை அக்காலத்துக்கு மேற்பட்ட பூரணம் அடைந்திருப்பதைக் காண்கின்றோம். அவை தமிழருடைய சொந்த மதிவலியால் எழுந்தவை; அன்றி முன்வந்திருந்தவர்களிடத்தில் இரவல்கொண்டு செய்துமுடித்தவைகளாகத் தோன்றவில்லை. பின்வந்த தமிழரே தங்கள் ஆதியிருப்பிடத்தில் தாங்கள் அடைந்துகொண்ட தேர்ச்சியைக் காலச்செலவில் இன்னும் விருத்தியாக்கி அப்பட்டணங்களைச் சமைத்தார்கள் என்னவேண்டும். தமிழர் அக்காலத்துக் கட்டிய பலபட்டணங்களுள் பஞ்சாப்பிலே ஹரப்பாவும் சிந்துவெளியிலே மொஹெஞ்சோதரோவும் தலைநகரிகளாயிருந்தன எனச் சொல்லலாம் போலும்; முந்தியதிலும் பிந்தியதைத்தான் ஆராய்ச்சியாளர் நன்றாய்ப் பரிசோதிக்கத்தக்கவர்களானார்கள். மொஹெஞ்சோதரோ ஒரு நல்ல சமபூமியில் சிந்து ஆற்றுக்குச் சமீபத்தில் அமைக்கப் பட்டது. முற்காலத்தார்களெல்லாம் தண்ணீர்வசதியைநோக்கி ஆறு வாவி முதலிய நீர்நிலைகளை அடுத்தே தங்கள் வாசஸ்தலங்களை அமைப்பர் (காட்டுமிருகங்களால் ஊறு நிகழாதிருக்கும்பொருட்டு வாவிகளுள் கம்பங்கள் நிறுத்தி அந்தரத்திலே கொட்டிலமைத்துச் சீவித்தோரையும் இங்கு நினைக்கத்தகும்). மொஹெஞ்சோதரோவிலே சிந்துநதியின் தண்ணீர்நலத்தினைநோக்கி அதன் சமீபத்தில்

இருந்தவர்களுக்கு அந்த நதிதான் கேடாகிப் பெருக்கெடுத்தெடுத்து அன்னோர்வீடுகளை நிலமட்டத்திலிருந்து உயர்த்தி உயர்த்திக் கட்டப்பண்ணிக்கொண்டுவந்தது. இவ்வாறே அப்பட்டணம் காலத்துக்குக்காலம் அடித்தளத்தில் ஒன்றும் அதற்குமேல் வேறொன்றுமாக மாறுபட்டுவந்திருக்கின்றது. அதனால், இப்போது கண்டுபிடித்த பட்டணத்துக்குக்கீழே வேறொன்று உண்டு. ஆயின், அதனைத் தோண்டிக்காண ஆற்றில்நின்று கசிந்துவரும் நீர்ப்பெருக்கு இடங்கொடாது. சிந்துநதிதான் ஈற்றில் மொஹெஞ்சோதரோ மக்கள் ஒருநாள் தங்கள் இல்லிடங்களைவிட்டு வலசைவாங்கச்செய்த காரணங்களுள் ஒன்றாயிற்றுப்போலும்.

இப்பட்டணத்திற் பிரதான வீதிகள் விசாலமானவை. அவற்றுள் ஒன்று 33 அடி அகலமுள்ளது. இந்த வீதிக்குக் குறுக்கே பதினெட்டடிவரையில் அகலமுள்ள குறுக்குத்தெருக்கள் வருகின்றன. கட்டடங்கள் நெருங்கிய பகுதிகளில் ஒன்பதுமுதல் பதின்மூன்றடி அகலமான சிறு தெருக்களும் உள. உடைந்த செங்கல் கலவோடுகளைக் களிமண்மேற்போட்டு இறுக்கித் தெருக்கள் இடையிடையே கெட்டியாக்கியும்விடப்பட்டிருக்கின்றன. தெருக்களிலிருந்த வீடுகள் சிலவற்றின் சுவர்களில் இன்றைக்கு இருபது இருபத்தைந்து அடிவரையில் அழியாமல் நிற்கக் காண்கின்றோம். இவைகளின் கீழ்ப்பாகம் பழையபட்டணத்திற்குரியதும் அதிக உறுதியாய்க் கட்டப்பட்டதுமாம். மொஹெஞ்சோதரோவிலும் ஹரப்பாவிலும் சுட்டசெங்கல்லே கட்டடங்களுக்கு உபயோகிக்கப்பட்டது. இடைவெளிகளை நிரப்புதற்கும் அத்திவாரங்களுக்கும் பச்சைக்கல் வழங்கியிருக்கிறது. சுவர்களின் வெளிப்பூச்சுக்குத் தவிட்டோடுகலந்த களிமண் உபயோகித்ததாகத்தோன்றும். செங்கற்கள் தற்காலத்தாருக்கு ஆச்சரியம் விளைவிக்கும்படியான நல்ல அளவுபிரமாணத்தோடு அறுக்கப்பட்டன. அதாவது 11 அங்குல நீளம், $5\frac{1}{4}$ அல்லது $5\frac{1}{2}$ அங்குல

அகலம், $2\frac{1}{4}$ அல்லது $2\frac{3}{4}$ அங்குல கனம். இது கட்டுவேலைக்கு மிகவும் வாய்ப்பான ஒரு அளவு. இந்தியாவிலே பிற்காலம் இவ்வளவு வசதியான ஒரு அளவுபிரமாணத்தை எங்கேனும் மேற்கொண்டாரில்லை. செங்கற்கள் திறந்தசூளைகளிற் சுடப்பட்டன என்று எண்ண இடமுண்டு. சுமேரியர் எகிப்தியருள்ளும் இவ்விதமான செங்கல் கிடையாது. பிற்காலத்து உரோமர்மட்டும் நமது பழம்பட்டணத்தாருடையனபோன்றவைகளைச் சுடுவோரானார்கள். மொஹெஞ்சோதரோவின் வீட்டு உள்முற்றங்களிற் கிணறுகள் கட்டியிருக்கும் சிறப்பு மெச்சத்தகுந்தது. செங்கற்கள் நன்றாய்த் தேய்த்து உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. பிற்காலத்தார் நீர் மட்டம் எழும்ப எழும்ப உயர்த்திக்கட்டியபாகம் நன்றாயிராவிடினும், கீழ்ப்பாகம் ஐயாயிரம் வருஷங்களின்பின் இன்றைக்கும் அப்படியே உறுதியாய்க் காணப்படுகின்றது. பழம்பொருளாராய்ச்சியாளரும் வேலைக்காரரும் இன்றைக்கு அந்தக் கிணறுகளைத் துப்புரவாக்கியபின் அவைகளிலிருந்தே தண்ணீர் எடுத்துக் குடிக்கிறார்கள்.

வீடுகள் உபயோகத்துக்கு மிக ஏற்றவைகளாயன்றி, எகிப்திற்போலச் சிற்ப அலங்காரம் விளங்கவும், சுமேரியாவிற்போல அழகான முகப்புக்கள் அமையவும் கட்டப்பட்டனவல்ல. ஆயினும், அந்தத் தேசங்களிலேயிருந்த பொதுசனங்களின் இல்லங்களைக் காட்டிலும் மொஹெஞ்சோதரோ வீடுகள் வசித்தற்குப் பலமடங்கு சிறந்தவைகள். இவற்றுள் அதிகமானவைகள் ஒரு அடுக்குக்கு மேற்பட்ட மெத்தைவீடுகளாம். நிலமட்டமான கீழ் அடுக்கில் இரண்டு மூன்று சயன அறைகளும், மேல்மெத்தையிற் பழக்கத்துக்குரிய அறைகள் சாலைகளும் இருந்தன. வீடுகள் பொதுவாய் ஒன்றோடொன்று தொடுத்திருக்கத் தெருக்களே வெளிமுற்றம் போலிருக்கும். ஆயின் இல்லங்களெல்லாம் நாற்சாரும் வீடும் போல நடுவில் உள்முற்றமும், பக்கங்களில் அறைகள் சார்களும்

கொண்டவைகள். நடுமுற்றங்களிலேதான் ஆடுமாடுகள் கட்டி நின்றனபோலும். முற்றத்தின் மூலைகளில் அடுப்படியும் இருந்ததாகலாம். பட்டணத்தின் சிறிய வீடுகள் முப்பது அடி நீளம் இருபத்தோரடி அகலம் வரையில் உள்ளன. அவைகளில் நாலு அல்லது ஐந்து அறைகளிருக்கும். பெரியவீடுகளில் முப்பது அறைகள் வரை இருந்தன. அறைகள் தற்காலத்தவைகளிலும் பார்க்கச் சிறியவைகள். சுவர்களோ, மேல்மெத்தையைத்தாங்குதற்குப் போலும் மிகத்தடித்தவைகளாக அமைக்கப்பட்டுள்ளன. சுவரின் மேற்புறத்திற் பலமுறைகாணப்படும் சதுரத்துவாரங்கள், கூரையைத் தாங்கிய குத்துக்கால்கள் நின்ற இடம்போலும். குறுக்குமரங்கள் பரப்பி, நாணற்பாய்களால் மூடித் தடிப்பாய்க் களிமண் அப்பியதே கூரையாகும். இவ்விதமான களிமண் கூரைகளை இன்றைக்கும் சிந்துப்புறங்களிற் காணலாம். அறைக்குள் நிலத்திற் புதைத்திருக்கும் பெரிய சாடிகளுள் தானியங்கள் சேமித்துவைக்கப்பட்டன.

மொஹெஞ்சோதரோவீடுகளிலுள்ள ஒருதனிச்சிறப்பு என்னவெனில், ஏறக்குறைய ஒவ்வொன்றிலும் உள்ள ஸ்நான அறைகளாம். இந்தக் கட்டடங்களின் தளம் உறுதியாகவும் தண்ணீர் இலேசாக இழிந்து தெருக்களில் ஓடத்தக்கபடியும் செய்யப்பட்டிருக்கிறது. சாக்கடைத்தண்ணீரெல்லாம் ஓடிப் பெரிய கால்களில் விழுந்து பட்டணம் முழுதும் சுத்தமாயிருக்கும்படிசெய்திருத்தல் மிக்க விசேஷமானது. நீர்ப்போக்குவிஷயமாய் இந்தப் பட்டணத்தில் அமைந்திருந்த ஏற்பாடுகள் தற்காலத்துச் சிந்துப்பிரதேசப் பட்டணங்களில் இல்லை என்லாம். மேல்மெத்தையிலிருந்து நீர் கீழே ஓடவும், கிணறுகளின் கழிவுநீரைக் கொண்டுசெல்லவும் தேய்த்தழுத்திய செங்கல்லாற் சமைத்திருந்த கால்களும் மட்குழாய்களும் வியப்புக்குரியவை. இந்தியப்போக்கான மலகூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அசுத்தங்களை எடுத்துச்செல்லும்

தொழிலாளிகளும் இருந்தனரென்று தெரிகிறது. சனங்கள் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றுதற்கு வேண்டியவற்றையெல்லாம் நகரசங்கம் போன்ற ஒரு மேலதிகாரஸ்தாபனம் செய்துவந்ததாகத் தெரிகிறது.

இப்பட்டணங்களில் ஆலயம், அரசிருக்கை முதலிய பெரிய கட்டடங்கள் இதுவரையில் வெளிவரவில்லை. ஆயினும், மொஹெஞ்சோதரோவில் விசாலமான ஒரு பொது ஸ்நானத்தொட்டியும் யாரோ பெரியவர்களுடைய மாளிகையின் அழிவுகளும், ஹரப்பாவில் ஒரு பெரிய பண்டசாலையும் கண்டுபிடிக்கப்பட்டன. மொஹெஞ்சோதரோவின் ஸ்நானகூடம் 40அடி நீளமும் 23அடி அகலமுமானது. கீழேஇறங்கப் படிக்கட்டுகள் இருக்கின்றன. மேலே சுற்றிலும் ஏழடி அகலமுள்ளதாய்த் தளவிசையிட்ட நடைசார் ஒன்று உண்டு. அது கிராதிபோல இடைவெளிகள் அறுத்த ஒரு சுவரினாற் சூழப்பட்டிருக்கின்றது. சுவருக்கு வெளியே, சில அறைகளும் இருக்கின்றன. இவை அங்கே ஸ்நானம்பண்ணுபவரோ அல்லது மேற்பார்ப்போரோ தங்குதற்கு அமைக்கப்பட்டதுபோலும். இந்தக் கட்டடத்திலேதான் தண்ணீர்பொசியாதபடி வெகுதூரத்திலிருந்து எடுப்பித்த கிசில் உபயோகித்திருக்கிறது. தண்ணீர்த் தொட்டியை நிரப்புவதற்கு அண்டையிலுள்ள மூன்று கிணறுகள் உதவியாயின. தண்ணீரை இடையிடையே வெளிப்போக்குதற்கு ஒரு மூலையிலே சதுரமான துவாரமும், அதன்கீழ் வாய்க்காலும், ஒரு ஆள் உட்செல்லத்தக்க உயரமான மதகும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒருவேளை இந்தத் தொட்டி சமீபத்திலிருந்த யாதொரு ஆலயத்துக்குப்போவோர் சமயாசாரப்படி தோய்ந்து கொண்டு செல்லுவதற்கு வழங்கினதாகலாம்.

மொஹெஞ்சோதரோவிலே கண்டுபிடித்த மிகப்பெரியகட்டடம் 242அடி நீளமும் 112அடி அகலமும் உள்ளது. இதற்குச் சற்றே

சிறியதும் ஒன்று உண்டு. இவைகளுக்குப்பல உள்முற்றங்களும் அவைகளைச்சுற்றி அறைகளும் உள. இக்கட்டடங்கள் பெரிய வியாபாரமுதலாளி அல்லது தலைவனுடையவைபோலும். பல அறைகளிலும் வசித்தவர்கள் கீழுத்தியோகஸ்தர்களும் வேலைக்காரருமாகலாம். முன்சொல்லிய ஸ்நானத்தொட்டிக்குச் சிறிது தூரத்துள்ளே 40அடிச் சதுரமான ஒரு பெரிய கட்டடம் இருந்தது. அதன் கூரையைத்தாங்க இருபது செங்கற்றூண்கள் நாற்புறமும் நின்றன. அது ஒரு சந்தையாகலாம் என்பது டாக்டர் மக்கேயின் கருத்து. வேறிடங்களிலே பெரிய அறைகளும் வயிரமான தளங்களும் உள்ள கட்டடங்கள் காணப்படுகின்றன. சிலதளங்களிற் சாடிகள் பதித்துவைத்த அடையாளம் கிடக்கிறது. இவைகள் தண்ணீர்ச்சாலைகள் அல்லது குடிவகைக்கடைகளாகலாம்.

ஹரப்பாவிலுள்ள பெரியகட்டடத்தின் மீதியொன்றில் ஒன்பது அடித்தடிப்புள்ள சுவர்கள் பல சமதூரத்திலுள்ளவைகளாய்ச் சோடுசோடாகக் காணப்படுகின்றன. சோட்டுச்சுவர்கள் 52அடி வரையில் நீளமானவை. இக்கட்டடம் அரசினருடைய தானியங்கொண்டகளஞ்சியமாம் என்பது ஆராய்ச்சியாளர்கருத்து.

மொஹெஞ்சோதரோவுக்கு மேற்கேயுள்ள குன்றுகளில் வசித்த அக்காலத்தார் வேறுவகையான ஒரு சீர்திருத்தமுள்ளவர்கள். அவர்களுடைய வீடுகள் பரும்காட்டுக்கற்களாற் களிமண் சாந்திட்டுக்கட்டப்பட்டன. சில குன்றவர் கோட்டைபோலக் கல் மதில்கள் எழுப்பியும் வைத்திருந்தனர். இவர்கள் மொஹெஞ்சோதரோமக்களுக்குப் பன்முறையும் எதிரிகளாய் அவர்களுடைய சமாதான வாழ்க்கைக்கு இடையிடையே பங்கம் விளைவிப்போராய் இருந்தார்கள் என நம்ப இடமுண்டு.

[தொடரும்]

1944ஆம் ஜுன்மீ 29உ (தாரணஆம் ஆனிமீ 16உ)

மாலை 6-மணிக்குத் தல்லாகுளத்தில் இராமநாதபுரம் மஹாராஜா அவர்கள்பங்களாவிற் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற

## தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம்ராஜா R. ஷண்முக ராஜேசுவர நாகநாதசேதுபதி மஹாராஜா அவர்கள்
—அக்கிராசனாதிபதி.

2. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L. M.L.C.
—உப-அக்கிராசனாதிபதி.

3. ,, மதுரமித்திரன் ந. சுப்பிரமணியம் அவர்கள்

4. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.
—காரியதரிசி.

5. ,, V. ஷண்முகசுந்தரம்பிள்ளையவர்கள் M.A., B.L.
—கூட்டுக்காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

### தீர்மானங்கள்.

1 சங்கமாபீசு வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

2 இச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய சிதம்பரம், ஜோதி ஆசிரமம், மகா-ா-ா-ஸ்ரீ பண்டித. சித. நாராயணசாமி அவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

3 அன்னியதேசமாகிய Mauritius ல் உள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் லைப்ரேரிக்குச் செந்தமிழ்ப்பத்திரிகையை இனாமாக அனுப்பிவரவேணுமென்று கேட்டுக்கொண்டபடி இனாமாக அனுப்பிவர அனுமதிக்கலாயிற்று.

4 சங்கத்தின் அங்கத்தினராயிருப்பதினின்றும் விலகிக்கொள்ள விரும்பித் திருவனந்தபுரம் ஸ்ரீ K. S. கோபாலையரவர்கள் அனுப்பிய ராஜீநாமா அங்கிகரிக்கலாயிற்று.

5 சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனைசெய்யவேண்டுமென்று மதுரைவக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ R. சேஷையங்கார் B.A., B.L. அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

6 சங்கவருஷோத்ஸவம் நடத்துவதற்குச் சௌகரியமான தேதி குறிப்பிடவேண்டுமென்று மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம், *R. Shanmuga Rajeswaran,*
29—6—'44. அக்கிராசனாதிபதி.

---

# அநுதாபக் குறிப்பு.

---

இம் மதுரைநகரப் பிரமுகர்களுள் ஒருவரான K. இராமையங்கார் B.A., B.L. அவர்கள் நிகழும் தாரணஞு புரட்டாசிமீ 1௳ (16-9-44) சனிக்கிழமை பரமபதமடைந்தமை தெரிந்து மிக வருந்துகிறோம். இவர் தேர்ந்த வழக்கியலறிஞர்; உயர்ந்த ஒழுக்கமும் வைதிகசிரத்தையும் உடையவர்; ஊக்கமும், மதிவலியும், மனவலியும், நேர்மையும், செல்வாக்கும், உலகியலறிவோடு வைணவசமயநூலறிவும் மிக்கவர்; எல்லாராலும் நன்குமதிக்கப் பெற்றவர்; பல ஆண்டுகள் சட்டசபைகளில் அங்கத்தினராயும், இம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையங்கத்தினராயும், பலபொதுநிலையங்களில் உறுப்பினராயும் இருந்து சிறந்தபணி ஆற்றியவர். இவர் பிரிவு பொதுவாக இந்தியர்க்கும் வைதிகசமயத்தார்க்கும் சிறப்பாக வைணவர்க்கும் பெருநஷ்டமாகும். இவரைப் பிரிந்து துயருறும் இவர் தொடர்புடையார்க்கெல்லாம் இதன்மூலம் நம் அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்திராசிரியர்.

---

ஸ்ரீ:

# மதிப்புரை

துறைக்கோவையென்பது, சில நூற்றாண்டுகளுக்குமுன் சேது ஸமஸ்தானாதிபதியாய்விளங்கிய இரகுநாதஸேதுபதிமன்னரைப்பாட்டுடைத் தலைவராகக்கொண்டு, சேதுநாட்டுப் பொன்னங்கால் அமுதகவிராயரால், நாணிக்கண்புதைத்தல் என்னும் ஒரு கிளவியே பயில நானூறுசெய்யுளால் இயற்றப்பெற்றதொரு பிரபந்தமாகும். சொற்பொருளணிநலந்தோய்ந்து தொடைநடைநயங்களும் வாய்ந்து சிறந்த இந்நூற்பாக்களில் இப்பொழுது கிடைப்பன 311 பாடல்களே. இப்பிரபந்தம், திரு. கா இராமசாமிநாயுடு அவர்கள் எழுதிவைத்திருந்த உரையுடன் சென்னைத் திருவாளர்களான ஏ. சொக்கலிங்கம்பிள்ளை, இராமலிங்கத்தம்பிரான் என்பவர்களாற் பரிசோதிக்கப்பெற்று, திரு. ஏ. சொக்கலிங்கம்பிள்ளையவர்களால், திரைலோக்கித் தமிழறிஞர் திரு. திருநாவுக்கரசுபிள்ளையவர்கள் உதவிய பொருள்கொண்டு புத்தகமாக நல்லகாகிதத்தில் அழகாக அச்சிட்டு வெளியிடப்பட்டுளது. இதனுள் இடையிடையே பலபாடல்களுக்கு வரைந்துள்ள உரை இன்னும் ஆராய்ந்து திருத்தியமைத்துக்கொள்ளத்தக்கதாயுளது. எனினும், இவ்வுரைப்பதிப்பு இப்பிரபந்தம் முழுவதையும் பொருளொடுபடிக்க விழைந்திருந்தோர் பலர்க்கும் ஒருவாறு பயன்படும். இப்புத்தகத்துள் முதலிற் பதிப்பாசிரியர் முகவுரையும், திரு. தே. மீனாக்ஷிசுந்தரனார் M.A, B.L, M.O.L. எழுதிய முன்னுரையும், அடுத்து நூலாசிரியர்வரலாறும் சேர்க்கப்பட்டுள்ளன. பின்னர் இந்நூற்பாடல்களும் அவற்றில் அமைந்த வெளிப்படையும் குறிப்புமான பொருள்களும் அரும்பதவுரையும் தனித்தனி பதிக்கப்பட்டுள்ளன. இந்நூலுள்வரும் பிறதுறைகள் தலங்கள் ஊர்கள் நாடுகள் அடியார்களின் பெயர் முதலிய விவரக்குறிப்பும் செய்யுள்முதற்குறிப்பும் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு இந்நூற்பொருளை அச்சிட்டுதவிய திரு. சொக்கலிங்கம்பிள்ளையவர்களுடைய தமிழ்ப்பற்றும், இப்பதிப்புக்குப் பொருளுதவிபுரிந்த திருவாளர் திருநாவுக்கரசுபிள்ளையவர்களுடைய பரோபகாரசீலமும் பாராட்டத்தக்கன. டிம்மி 8 பக்க அளவில் 230 பக்கமாக அச்சிடப்பட்ட இப்புத்தகத்தின் விலை ரூ 1-12-0. வேண்டுவோர், சென்னை பழையவண்ணாரப்பேட்டை மணலி சின்னையாமுதலிதோட்டத்தெருவில் ஸர் தியாகராயர் பார்க்குக்கெதிரில் 1 நிர். வீட்டில் ஏ. சொக்கலிங்கம்பிள்ளையவர்களிடம் பெறலாம்.

ஸ்ரீ ஸாரக்ஷேத்திரம் எனவழங்கும், திருச்சேறைத்தலவரலாறு, 2திருச்சேறை மாஹாத்மியம், 3 திருச்சேறைத்தலபுராணம் என்னும் இவற்றுள், (1) திருச்சேறைத்தலவரலாறு ஸ்ரீஸாரநாதப்பெருமாள் தேவஸ்தானநிருவாக அதிகாரி திரு. ஜெ. இராமாநுஜநாயுடு அவர்களால் எழுதப்பட்டது; முதலில் ஸ்ரீஸாரநாயகிஸமேத ஸ்ரீஸாரநாதப்பெருமான் திருவுருவப்படமும், கோவிற்படமும், அதன்விளக்கமும் உடையதாய் இத்தலத்தைப்பற்றி அறிய வேண்டிய எல்லா விஷயங்களையும் எளிய நடையில் தெளிய விளக்குவதாய் அமைந்தது. (2) திருச்சேறைமாஹாத்மியம், பிரும்மாண்டபுராணத்திலும் பவிஷ்யத்புராணத்திலும் உள்ளவற்றின் தமிழ்மொழிபெயர்ப்பாகும். மொழிபெயர்த்துதவியவர் அம்ருதலஹரியாசிரியர் ஸ்ரீ S. M. சுந்தரராஜாசாரியரவர். ஒருபக்கம் தேவநாகரலிபியில் வடமொழி மூலசுலோகங்களும் அவற்றுக்கு நேராக அடுத்தபக்கம் தமிழ்மொழிபெயர்ப்புமாயுள்ள இப்பதிப்பு, தமிழுணர்ச்சியுடையார்க்குமட்டுமன்றி வடமொழியுணர்ச்சியுடையார்க்கும் பயன்படும். ஸ்ரீ. உப. வே. வித்வான் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி எழுதிய பொருள்பொதிந்த முன்னுரை இதனைப் பெரிதும் சிறப்பிக்கின்றது. 3. திருச்சேறைத்தலபுராணம், திருவாளர் பந்தி. சா. பிச்சைமுத்துச்சேதிராயரவர்களால் வடமொழியிலுள்ள இத்தலமாஹாத்மியநூலைத்தழுவித் தமிழ்ச்செய்யுணடையில் இயற்றப்பெற்றது. 50 கவிகளையுடையது. இவற்றுள் முன்னிரண்டும் திருச்சேறை ஸ்ரீஸாரநாதப்பெருமாள் தேவஸ்தான வெளியீடுகளாகும். மூன்றாவதாகிய தலபுராணம், கும்பகோணம் இரும்பு வியாபாரம் திரு. த. அ. மா. சண்முகவேலுப்பிள்ளையவர்களால் அச்சியற்றுவித்து வெளியிடப்பட்டது. வேண்டுவோர் மேற்குறித்த தேவஸ்தான நிருவாக அதிகாரியான நாயுடு அவர்களுக்கு எழுதி இவற்றின்விலை முதலிய விவரம் தெரிந்துகொள்க.

---

ஈழமண்டலசதகம்:—இது, ஏறுபுகழுடைய ஆறுமுகநாவலர் மாணக்கரான அல்வை திரு. வே. கணபதிப்பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. 102 கட்டளைக்கலித்துறைகளையுடையது. இதனுள் முதற்பதினெட்டுப் பாடல்களால் ஈழமண்டலத்தின் பழம்பெருமை கூறப்படுகிறது. பின்னர் அந்நாட்டுள்ள மலைகள் ஆறுகள் தலங்கள் தீர்த்தங்கள் முதலியவற்றாலும் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் துறவிகள் புலவர்கள் பிரபுக்கள் முதலியோராலும் அந்நாட்டுக்குரிய சிறப்பு உரைக்கப்படுகிறது. செய்யுள் நடை தெளிவும் இனிமையும் வாய்ந்தது. இதன் விலை சதம் 25. வேண்டுவோர் இந்நூலாசிரியரான பிள்ளையவர்களிடம் பெறலாம்.

---

[திருநறையூர் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸப்பெருமாள்தேவஸ்தான வெளியீடான **திருநறையூர்த்தலவரலாறு:—** எழுதியவர் சென்னை ஹிந்து அறநிலையப் பாதுகாப்புக்கழகத்தின் வைணவசமயப்பிரசாரகர் ஸ்ரீமான் நா. ஸ்ரீகாந்த ராமாநுஜர். விலை: அணா 4. கிடைக்குமிடம்: ஸ்ரீ. ஸ்ரீநிவாஸப்பெருமாள் தேவஸ்தானம், நாச்சியார்கோயில் (தஞ்சைஜில்லா).]

திருநறையூர், சோழநாட்டுள்ள திருமால் திருப்பதிகளுள் ஒன்று; 'எண்டோளீசர்க் கெழின்மாடம் எழுபதுசெய்துலகமாண்ட திருக்குலத்து வளச்சோழ'னென செங்கணனும், 'மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங் கூற அவதரித்த' திருமங்கைமன்னனும் ஈடுபட்டபெருமையுடையது. இத் தலவரலாறு, உய்திபெறவிரும்புவார்க்குத் திவ்யதேசசேவை இன்றியமை யாததென்பதைப்பற்றியும், இத்தலத்தின் சிறப்பு, தோற்றம், கோயில், விமானம், கருப்பக்கிரகம் முதலியவற்றைப்பற்றியும், இத்தலத்து நம்பி நாச்சியார்: இவர்களைப்பற்றியும்; நம்பிஸந்நிதியுள்ளும் வெளியிலும் உள்ள பிறமூர்த்திகள், ஸந்நிதிகள், தீர்த்தங்கள் அவற்றில் நீராடுதற்குரிய முறைகள், தலவிருக்ஷங்கள், உற்சவங்கள், தலபுராணம், நம்பியைப்பூசித்துப் பேறுபெற்றோர்விவரம், இத்தலசம்பந்தமான நிர்வாகம், வரவு செலவு, கட்டளைகள், உபயம், கல்வெட்டுக்கள் ஆதியவற்றைப்பற்றியும் அறிய வேண்டியவற்றை ஆங்காங்கு ஏற்ற படங்களுடன் நன்குவிளக்குகிறது. ஆழ்வார்களின் அருளிச்செயல் இடையிடைவிரவிய இவ்வரலாற் றுரைநடை படிப்போர்க்கு இனிமைபயப்பதுடன் இதையெழுதியவர்க்கு வைணவசமய நூல்களிலுள்ள பயிற்சியைப் புலப்படுத்துவதாயும் உள்ளது.

இவ்வாறு பல தலவரலாறுகள் வெளிவருதற்கு மூலகாரணமான சென்னை ஹிந்து அறநிலையப் பாதுகாப்புக்கழகஉறுப்பினர்நன்முயற்சி பாராட்டத்தகும்.

---

சிந்தாமணி வெளியீடான **உதயம்:—** இது, கோயம்புத்தூரிலிருந்து மாதந்தோறும் வெளிவருவது. இதன் பதிப்பாசிரியர் திரு S. R. சாரங்கன் ஆவர். இதில் பழையவரலாறுகள், நவீனகதைகள், நாட்டியம், பெரியோர் வாழ்வில் இடையிடை நிகழ்ந்த விசேஷநிகழ்ச்சிகள் முதலிய பலதுறை களைப்பற்றிய கட்டுரைகள் அழகிய நடையில் வெளியிடப்படுகின்றன. கண் கவர் வனப்பிற் சித்திரங்களுடன் நல்லகாகிதத்தில் திருத்தமாக அச்சிடப் பெற்ற இதன் விலை புத்தகம் 1க்கு அணா 4. வேண்டுவோர் இதன் பதிப்பாசிரியரிடம் பெறலாம்.

---

1. தூப்புல்வள்ளல் பழமொழிச்சிறப்பு, 2. அடைவமைத்தும் அற்புதன்: என்னும் இவ்விரண்டும் திருவல்லிக்கேணித்தமிழ்ச்சங்கத்தின் 14, 15-ஆம் வெளியீடுகளாகும். இவற்றைத் தொகுத்தெழுதியவர் அச்சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ ப. ரே. திருமலையையங்காரவர்கள். இவற்றுள் தூப்புல் வள்ளல் பழமொழிச்சிறப்பு என்பது, ஸ்ரீதேசிகப்பிரபந்தத்தின் தனியனான 'சீரொன்று தூப்புல்' என்று தொடங்கும் பாசுரத்துக்கு விரிவுரையாயமைந்தது; மைசூர்ப் பரகாலமடத்து 33-ஆம்பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கிற பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர உபயவேதாந்தாசார்யரான ஸ்ரீரங்கநாத ப்ரஹ்மதந்த்ர பரகால மஹா தேசிகருக்கு அவரது அறுபதாண்டுநிறைவுநன்னாளில் உரிமையாக்கப் பெற்றது. அடைவமைத்தும் அற்புதன் என்பது, ஸ்ரீதேசிகப்பிரபந்தத்திலே கண்ட பல அடைவுகளை விளக்க எழுந்தது; திருவயிந்தைநகரமர்ந்த தூப்புல்வள்ளலார்திருவடிவாரத்தில் நிகழும் தாரணஸூ புரட்டாசிக் கேட்டைநன்னாளிற் காணிக்கையாக ஸமர்ப்பிக்கப்பெற்றது. இவற்றால் ஸ்ரீதேசிகனுடைய பெருமையும் ஸ்ரீதேசிகப்பிரபந்தத்தின் சீர்மையும் படிப்போர்க்கு நன்குபுலனாவதுடன் பதிப்பாசிரியரது பலவகை நூலறிவும் அவர்க்கு ஆசாரியர்திறத்தும் பெரியோரிடத்தும் உள்ள ஈடுபாடும் வெளியாகும். இவற்றை ஏற்ற மேற்கோள்களோடு விரித்தெழுதிப்பதிப்பித்துத் தக்கார்க்குத் தக்ககாலத்தில் உரிமையாகவும் காணிக்கையாகவும் ஸமர்ப்பித்த ஐயங்காரவர்கள் நன்றூற்றியவராவர். திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம் இன்னோரன்ன தமிழ்த்தொண்டும் சமயத்தொண்டும் புரிந்து நீடு நிலவுக. இப்புத்தகங்கள் கிடைக்குமிடம்:—காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம், 15. கணபதிமுதலிதெரு, திருவல்லிக்கேணி சென்னை.

---

ஆநந்தபோதினி:—தமிழ்நாட்டில் நெடிதுநின்று நிலவும் தமிழ்மாதப் பத்திரிகைகளுள் ஆநந்தபோதினியும் ஒன்று. பலதுறைகளிலும் சிறந்த தொண்டுபுரிந்துவரும் அது இப்பொழுது, இருபத்தொன்பதாண்டு நிறைந்து முப்பதாம் ஆண்டெய்தி விளங்குகிறது. உயர்ந்த எழுத்தாளரால் எழுதப் பட்ட நவீனதொடர்கதைகளும் ஒழுக்கநெறிகளும் விஞ்ஞான சாத்திர விஷயங்களும் சோதிட ஆராய்ச்சிகளும் ஆன பல கட்டுரைகள் வழக்கப்படி அதை அலங்கரிக்கின்றன. அது மேலும் மேலும் வளர்ந்து தமிழர்க்கு நற் பயனளிக்கும்படி அதனைநடத்திவரும் ஆசிரியர் திரு. N. முனிசாமிமுதலியாரவர்களுக்குத் தமிழ்மக்கள் போதிய ஆதரவுதருக. விலை பகுதி 1க்கு அணா 3. கிடைக்குமிடம்:— ஆனந்தபோதினி காரியாலயம், சௌகார்பேட்டை, சென்னை.

---

உ

## 1944ஹு ஆகஸ்டுமீ 24உ (தாரணஹு ஆவணிமீ 9உ)

மாலை 6-மணிக்குத் தல்லாகுளத்தில் இராமநாதபுரம் மஹாராஜா அவர்கள்பங்களாவிற் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற

## தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம்ராஜா R. ஷண்முக ராஜேசுவர நாகநாதசேதுபதி மஹாராஜா அவர்கள்
—அக்கிராசனாதிபதி.

2. மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L. M.L.C.
—உப-அக்கிராசனாதிபதி.

3. ,, ராவ்பஹதூர் P. ரங்கஸ்வாமி நாயுடுகாரு B.A., B.L.

4. ,, A. ரங்கஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A.

5. ,, மதுரமித்திரன் ந. சுப்பிரமணியம் அவர்கள்

இவர்கள் வந்திருந்தார்கள்.

### தீர்மானங்கள்.

1. சங்கமாஸீசு வரவுசெலவுகணக்குகள் அடுத்த மீட்டிங்குக்குத் தள்ளிவைக்கலாயிற்று.

2. இடையகோட்டை மெத்தைவீடு, ஜனாப். M. சையத்ஹுஸ்ஸேன் அவர்களைச் சங்கத்தின் சாசுவதஅங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளலாயிற்று.

3. சங்கம் ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைக்கட்டணத்தொகைகள், அடியிற் கண்டபடி,

பீ. ஏ. பரீக்ஷைக்கு அணா எட்டிலிருந்து ரூபா ஒன்றுக்கும்,

இண்டர்மீடியேட்பரீக்ஷைக்கு அணா ஆறிலிருந்து அணா பன்னிரண்டுக்கும்,

மெற்றிக்குலேஷன் அல்லது ஸ்கூல்பைனல்பரீக்ஷைக்கு அணா நான்கிலிருந்து அணா எட்டுக்கும்

உயர்த்தப்பெற்றன.

மதுரைத்தமிழ்ச்சங்கம், *R. Shanmuga Rajeswaran,*

24—8—'44. அக்கிராசனாதிபதி.

ஸ்ரீ:

## "செந்தமிழ்" நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற நாற்பத்தொருவருட காலமாகத் தமிழ்மொழியின்வளர்ச்சிகருதி மாதம் ஒருமுறை வெளியிடப்பெற்றுவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகையானது, பல பண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரியவிஷயங்களை எளிதில் எல்லோருமுணர வெளியிடும்பெருமைவாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. அது, செந்தமிழ்நேயர்களின் அபிமானத்தையும், பண்டிதர்களின் ஆதரவையுங்கொண்டே இப்பகுதியோடு 41ஆம் தொகுதி முற்றுப்பெற்றிருக்கிறது. இனி, 42-ஆம் தொகுதி தொடங்கப்பெற்று, அதன் முதற்பகுதி நாளிது தாரணஞு கார்த்திகைமீ 15உக்குள் வெளிவரும். அப்பகுதி வழக்கப்படி அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச் சந்தாதார்களுக்கும் அத்தொகுதியின் வருஷச்சந்தாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப் பெறும். செந்தமிழபிமானிகள் வி. பி. யை அன்புடன் பெற்றுப் பத்திரிகையை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகையைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள் சிறந்த விஷயதானமளித்துச் செந்தமிழைச் சிறப்பித்து வரவும் வேண்டிக்கொள்ளப்பெறுகிறார்கள்.

அரசாங்கத்தார் வெளியிட்ட காகிதக்கட்டுப்பாட்டுத்தரவால் செந்தமிழ் பழையபக்கஅளவிற் குறைந்து நூற்றுக்கு முப்பதாக வெளிவருகிறது. அதிகஅளவில் வெளியிட முயற்சிநடக்கிறது. அநுமதிகிடைத்த பின் செந்தமிழ் அதிகமான பக்கங்களுடன் வெளிவரும். சந்தாநேயர்கள் பக்கக்குறைவைப் பொருட்படுத்தாது வழக்கப்படி செந்தமிழை ஆதரித்துவரவேண்டுகிறோம்.

குறிப்பு:— 42-ஆம்தொகுதிச் சந்தாத்தொகையை மணியார்டர்மூலம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், நாளிது தாரணஞு கார்த்திகைமீ 10உக்குள் இச் சங்கமாபீசிற்குக் கிடைக்கும்படி மணியார்டரை அனுப்பிவைத்தல் வேண்டும். அதற்குள் மணியார்டர் வாராவிட்டால் 42-ஆம் தொகுதியின் முதற்பகுதி வழக்கப்படி வி. பி. மூலம் அனுப்பப்

பெறும். வி. பி. அனுப்பியபின்பு அதனைப் பெற்றுக்கொள்ளாது திருப்பிவிடுவதால் சங்கத்துக்கு வீண்செலவு நேரிடுமாதலால் தயை செய்து வி. பி. யைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளு கிறோம்.

1—11—44.
மதுரை.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

---

# ஒரு வரவேற்புவிழா

திருவாங்கூர்நாட்டு அமைச்சர்பெருமானான மேன்மைமிக்க சசிவோத்தம ஸர். ஸி. பி. இராமஸ்வாமி ஐயரவர்கள், K.C.I.E., K.C.S.I., L.LD., நிகழும் தாரணஞூ ஐப்பசிமீ 12உ:மதுரைக்கு விஜயம்செய்தார்கள். அவர்களை மதுரைக்கல்லூரி முதலிய கலைக்கழகங்களும் பல பொதுஸ்தாபனங்களும் நன்கு வரவேற்று உபசரித்தன. மதுரைக்கல்லூரி உண்டிச்சாலைக்குக் கட்டிடங் தொடங்குதல் முதலிய பயன்மிகு செயல்களும் அவற்றோடியையப் பொருண்மிகுசொற்பொழிவுகளும் ஐயாவர்களால் சிறந்தமுறையில் நிகழ்ந்தன.

இந்த நிகழ்ச்சிகளுள் அவர்கள் மதுரைத்தமிழ்ச்சங்கத் துக்கு விஜயம்செய்ததும் ஒன்றாகும். 13உ (29—10—44) மாலை 5 மணிக்கு ஐயாவர்களை வரவேற்கும்பொருட்டு மதுரைத் தமிழ்ச் சங்க நடுமன்றத்து ஒரு பேரவை கூடியது. ஐயாவர்கள் அப் பொழுது சென்னை உயர்தர நீதிமன்றத்து நியாயதுரந்தரர் ஸ்ரீ N. சந்திரசேகரையரவர்கள், மதுரை ஜில்லா நீதிபதி ஸ்ரீ P. ராஜ கோபாலன் I.C.S., அவர்கள் முதலிய பிரமுகர்களுடன் சங்கத்துக்கு விஜயம் செய்தார்கள். சங்கத்துணைத்தலைவர் திரு. T. C. ஸ்ரீநி வாஸையங்காரவர்களும், சங்கத்தின் கௌரவ காரியதரிசியும் மதுரை ஸம்ஸ்க்ருதபரிஷத்தின் தலைவருமான திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும், சங்கநிருவாகஸபையுறுப்பின ரும் மதுரை நகரஸபைத்தலைவருமான திரு. ராவ்பகதூர். P. ரங்க ஸாமிநாயுடு அவர்களும், மதுராமித்திரன் திரு. ந. சுப்பிரமணியம் அவர்களும், மதுரை அமெரிக்கன்கல்லூரித் தமிழ்ப்போசிரியர்

திரு. ஆ. கார்மேகக்கோனாரவர்கள் முதலான தமிழ்ப்பண்டிதர்களும் சங்கப்புலவர்களும், மதுரையிலுள்ள இராமேசுவர தேவஸ்தான பாடசாலையின் அத்யக்ஷர் திரு. V. சுப்பிரமணிய ஐயரவர்களும் குழுமி ஐயரவர்களை எதிர்கொண்டு வரவேற்றனர்.

கடவுள்வாழ்த்துடன் வரவேற்புவிழாத் தொடங்கிற்று. சங்கத்தார்சார்பில் செந்தமிழின் உதவிப்பத்திராசிரியர் T. K. இராமாநுஜையங்கார் தாம் இயற்றிய வரவேற்புப்பாடல்களைப் படித்து ஐயரவர்களிடம் ஸமர்ப்பித்தனர்; பின்னர் சங்கக்கலாசாலையாசிரியர்களான திரு. சு. நல்லசிவன்பிள்ளையவர்களும் திரு. K. சிவஞானம் பிள்ளையவர்களும் இயற்றிய வாழ்த்துப்பாடல்களும் படித்துக் கொடுக்கப்பெற்றன. மதுரை ஸமஸ்க்ருத பரிஷத்தின் சார்பில் அதன் உபதலைவரும், இராமேசுவரம் தேவஸ்தான பாடசாலையத்யக்ஷருமான திரு. V. சுப்பிரமணியஐயரவர்கள் வடமொழியில் ஒரு வரவேற்புப்பத்திரம் படித்தளித்தார்கள்.

அப்பால் ஐயரவர்கள், தமக்கு மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரும், ஸம்ஸ்க்ருதபரிஷத்தாரும், வரவேற்பளித்ததற்கு நன்றிதெரிவித்துப் பின் வடமொழியறிவும் தென்மொழியுணர்வும் மக்கட்கு இன்றியமையாதனவென்றும், எத்தகைய உயர்ந்த விஷயங்களையும் எளியசொற்களில் தெளிய விளக்கும் ஆற்றல் தமிழ்மொழிக்கு உண்டென்றும் கூறித் திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத்தார் தமிழ் வளர்ச்சிக்காகச்செய்துவரும் முயற்சிகளையும் இன்னும் பல அபிப்ராயங்களையும் விளக்கி அழகியதொரு சிறிய சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவர் திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் சங்கவரலாற்றைச் சுருக்கிக் கூறிச் சங்கத்தார் வேண்டிக்கொண்டதற்கு இசைந்து ஐயரவர்கள் சங்கத்துக்கு விஜயம்செய்து சிறப்பித்ததகுறித்து நன்றிபாராட்டி ஐயரவர்களுக்கு மாலைசூட்ட வரவேற்புவிழா இனிது நிறைவேறியது.

சுபம் சுபம்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

நாற்பத்தொன்றாந்தொகுதி.

**Volume 41.**

சுபானு—தாரண௵

1943—1944

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

மதுரை.

# 41-ஆம் தொகுதியின் உள்ளுறை.


| விஷயம். | எழுதியவர். | பக்கம். |
|---|---|---|
| அநுதாபக்குறிப்பு:— | பத்திராசிரியர் | ௧௭௧, ௨௬௮ |
| ஆய்தவெழுத்தின் வரலாறு:- | திரு. நாராயணையங்கார், பத்திராசிரியர். | ௮௧ |
| ஆய்தவோசை:— | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வித்வான். மு. இராகவையங்காரவர்கள் | ௧ |
| உறுப்புச்செய்யுள்:— | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L., | ௧௫ |
| எண்ணும் எழுத்தும்:— | ஸ்ரீ. பண்டித. அ. கோபாலையரவர்கள் | ௧௦௩ |
| ஏர் என்னும் வைப்புத்தலம்:— | ஸ்ரீ. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள். | ௨௦௯ |
| ஒரு வரவேற்பு விழா: — | | ௨௭௫ |
| கம்பராமாயணசாரம் (உத்தரகாண்டம்):- | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. | ௫௧, ௯௭, ௧௪௫, ௧௬௧, ௨௧௭. |
| செந்தமிழ்நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்:— | | ௨௭௪ |
| சேதுவேந்தரது 35-வது ஆண்டுவிழா வாழ்த்துப்பா:- | ஸ்ரீலஸ்ரீ. ஒடுக்கம் நெல்லையப்பத் தம்பிரானவர்கள் | ௬௩ |
| சேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா:— | ஸ்ரீ. ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள் | ௫௭ |
| சேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள் விழா நாண்மங்கலக் கவிகள். | ஸ்ரீ. மகாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள் | ௬௪ |
| | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வித்துவான். மு. இராகவையங்காரவர்கள். | ௬௫ |
| | ஸ்ரீ. J. நாராயணசுந்தரமையங்காரவர்கள் | ௬௬ |
| | ஸ்ரீ. வித்வான் ரா. இராமானுஜையங்காரவர்கள் | ௬௯ |
| | ஸ்ரீ. கேசவராமசாமித்தேவரவர்கள் | ௭௧ |
| | ஸ்ரீ. திரு. நாராயணையங்காரவர்கள், பத்திராசிரியர் | ௭௨ |
| | ஸ்ரீ. வித்வான். பண்டிதர். R வீரராகவையங்காரவர்கள் | ௭௩ |
| | ஸ்ரீ. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் | ௭௪ |
| | ஸ்ரீ. K சிவஞானம்பிள்ளையவர்கள் | ௭௫ |
| | T. K. இராமானுஜையங்கார் | ௭௬ |

| | | |
|---|---|---|
| தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வடநாட்டிற்பரவிய வான்மறை :— | சுவாமி விபுலாநந்தரவர்கள் | சக,கூக |
| தென்னாட்டைப்பற்றிய சில குறிப்புக்கள் :- | ஸ்ரீ N. ஐயாஸ்வாமி சாஸ்திரியாரவர்கள், | கஉக |
| நட்டபாடைப் பண்ணின் எட்டுக்கட்டளைகள் :- | சுவாமி விபுலாநந்தரவர்கள், இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர் | கூ |
| பட்டினப்பாலையைப் பற்றிய ஓர் சாசனச்செய்யுள்:— | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளை யவர்கள் B.A., B.L. | உகச |
| பண்டைத்தமிழர்:— | சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர் | உரு, எஎ, கஙக, கஎஎ, உஉகூ, உசுக |
| பத்துப்பாட்டும் அவற்றின் காலமுறையும்:- | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளை யவர்கள், B.A., B.L. | உ0க |
| பாதசேனாபதீயம் :— | T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். | கஅஎ |
| பரிமேலழகர்:- | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளை யவர்கள் B.A., B.L. | உஙஎ |
| பிழைதிருத்தம்:— ... ... ... | | உஙசு |
| மதிப்புரை:— ... ... | | ங0, க0கூ, கசக, கஅரு, உஙச, உசுகூ |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 42 ஆம் வருஷோத்ஸவத்துப்படித்த வரவேற்புப் பத்திரம் | T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர் | ஙஎ |
| ஷை வருஷோத்ஸவத்துப்படித்த வாழ்த்துப்பத்திரம் | ஷை | ஙகூ |
| ஷை வருஷோத்ஸவ நிகழ்ச்சி:— | ஷை | ஙங |
| ஷை வருஷோத்ஸவ மங்களவாழ்த்து:- | ஸ்ரீ. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் | ஙஉ |
| மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாக ஸபைத்தீர்மானங்கள் | (பகுதி 2-ல் அநுபந்தம் பக். 1, 2.) | கஅச, உசுஎ, உஎங |

| | | |
|---|---|---|
| மஹாமஹோபாத்யாய சாமிநாதையரவர்கள்:— | T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். | அஎ |
| மொழிநட்பு:— | ஸ்ரீ. அ. அரங்கசுவாமி ஐயரவர்கள் | கக௨ |
| வாழ்க்கையும் விஞ்ஞானமும்:- | ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B L. | ௨௪௫ |
| ஸர். ஜெ. ஜெ. தாம்ஸனின் இளமைப்பருவம்:— | ஷை | கக, ௪எ |
| ஸ்ரீலஸ்ரீ. சாமிநாதசுவாமி களைப்பற்றிய நினைவுக் குறிப்புக்கள்:— | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. | களஉ |

---

# பொருளுரை வழங்கியோர் பெயரும் பொருளுரைகளின் பெயரும் பக்கமும்


ஸ்ரீ. பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. மயிலாப்பூர்.

ஸர். ஜெ. ஜெ. தாம்ஸனின் இளமைப்பருவம் கசு, சுஎ

வாழ்க்கையும் விஞ்ஞானமும் ... ... உசடு

ஸ்ரீ. அ. அரங்கசுவாமிஐயரவர்கள், B.A., B.L., மதுரை.

மொழிநட்பு ... ... ... கக௨

ஸ்ரீ. மஹாவித்வான். ரா. இராகவையங்காரவர்கள், இராமநாதபுரம்.

ஸேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா

நாண்மங்கலக்கவிகள் ... ... சுச

ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வித்வான். மு. இராகவையங்காரவர்கள், இராமநாதபுரம்.

ஆய்தவோசை ... ... ... க

ஸேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா

நாண்மங்கலக்கவிகள் ... ... சுடு

ஸ்ரீ. வித்வான். ரா. இராமாநுஜையங்காரவர்கள், இராமநாதபுரம்.

ஸேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா

நாண்மங்கலக்கவிகள் ... ... சுசு

T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர், செந்தமிழ்.

ஸேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா

நாண்மங்கலக்கவி ... ... ... எசு

பாதசேனுபதீயம் ... ... ... கஅஎ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 42-ஆம்

வருஷோத்ஸவநிகழ்ச்சி ... ... ங௩

ஷை வருஷோத்ஸவத்துப்படித்த

வரவேற்புப்பத்திரம் ... ... ஙஎ

ஷை ஷை வாழ்த்துப்பத்திரம் ... ஙசு

மஹாமஹோபாத்யாய சாமிநாதையரவர்கள் அஎ

ஸ்ரீ. N. ஐயாஸ்வாமி சாஸ்திரியாரவர்கள், ஆசிரியர், ஸ்ரீவேங்கடேசுவர கீழ்த்திசைக் கலைக்கழகம், திருப்பதி.

தென்னாட்டைப்பற்றிய சில குறிப்புக்கள் ... கஉக

ஸ்ரீ. S. கேசவராமசாமித்தேவரவர்கள், பரமக்குடி.

ஸேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா நாண்மங்கலக்கவிகள் ... ... எக

ஸ்ரீ. பண்டித. அ. கோபாலையரவர்கள், ஆலங்குடி.

எண்ணும் எழுத்தும் ... ... ... க0ரு

ஸ்ரீ. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள், அண்ணாமலைபல்கலைக் கழகம்.

ஏர் என்னும் வைப்புத்தலம் ... ... உ0கூ

ஸ்ரீ. K. சிவஞானம்பிள்ளையவர்கள், ஆசிரியர், மதுரைத்தமிழ்ச்சங்கம்.

ஸேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா நாண்மங்கலக்கவிகள் ... ... எரு

ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C., வெள்ளகால்.

கம்பராமாயணசாரம் (உத்தரகாண்டம்) ருக, கூஎ, கசரு, கசுக, உகஎ, உசுக

ஸ்ரீலஸ்ரீ. சாமிநாதசுவாமிகளைப்பற்றிய நினைவுக்குறிப்புக்கள் ... ... கஎஉ

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர், யாழ்ப்பாணம்.

பண்டைத்தமிழர் உரு, எஎ, கருக, கஎஎ, உஉகூ, உசுக

ஸ்ரீ. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள், ஆசிரியர், மதுரைத்தமிழ்ச்சங்கம்.

சேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா நாண்மங்கலக்கவிகள் ... ... எச

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 42-ஆம் வருஷோத்ஸவ மங்களவாழ்த்து ... ... ... ருஉ

ஸ்ரீ. ஜே. நாராயணசுந்தரமையங்காரவர்கள், ஆசிரியர், இராமநாதபுரம்.

ஸேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா ருள

ஷ வெள்ளணிநாள்விழா நாண்மங்கலக்கவிகள் சுசு

ஸ்ரீ. திரு. நாராயணையங்காரவர்கள், பத்திராசிரியர்.

ஆய்தவெழுத்தின் வரலாறு ... ... அக

ஸேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா நாண்மங்கலக்கவிகள் ... ... எஉ

ஸ்ரீ. ஒடுக்கம் நெல்லையப்பத்தம்பிரானவர்கள், திருவாவடுதுறை.

ஸேதுவேந்தரது 35-வது ஆண்டுவிழா வாழ்த்துப்பா சுரு

ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள், தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், இலங்கைப்பல்கலைக்கழகம், கொழும்பு.

தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வடநாட்டிற்பரவிய வான்முறை ... சக, சுக

நட்டபாடைப்பண்ணின் எட்டுக்கட்டளைகள் சு

ஸ்ரீ. வித்வான். பண்டிதர். R. வீரராகவையங்காரவர்கள், ஆசிரியர், மதுரைத்தமிழ்ச்சங்கம்.

ஸேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா நாண்மங்கலக்கவி ... ... ... எரு

ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள், B.A., B.L., தமிழாராய்ச்சித்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

உறுப்புச்செய்யுள் ... ... ... கரு

பட்டினப்பாலையைப்பற்றிய ஓர் சாசனச்செய்யுள் உகச

பத்துப்பாட்டும் அவற்றின் காலமுறையும் ... உ0க

பரிமேலழகர் ... ... ... உருஎ

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | |
|---|---|---|
| 1 | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 4 0 |
| 2. | கனாநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 3 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 3 0 |
| 6. | *நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 6 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... | 0 8 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 10 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 2 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... ... | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 4 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 3 0 |
| 15. | *திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 8 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 12 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 4 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 3 0 |
| 20. | *நரிவிருத்தம் ... ... ... ... | |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 8 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... ... | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... ... ... | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 1 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 2 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 1 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 8 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... ... | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 3 0 |
| 31. | *பாண்டியம் ... ... ... ... | |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 8 0 |
| 33. | *வேளிர்வரலாறு ... ... ... | |
| 34. | *அகப்பொருள்விளக்கம் ... ... ... | |
| 35. | *திருமந்திரநூபாட்டெக்குரை ... ... | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 1 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 8 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 2 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்) | |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 8 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 6 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 12 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் ... ... ... | | | |
| 50. | *தமிழரும் ஆந்திரரும் ... ... ... | | | |
| 51. | *மதங்கசூளாமணி ... ... ... | | | |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (தமிழ்) ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 66. | *சந்திரகுப்தன் ... ... ... | | | |
| 67. | அமிர்தாஞ்ஜலி ... ... ... | 0 | 2 | 0 |
| 68. | திருமுருகாற்றுப்படை ... ... ... | 0 | 10 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

---

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. 4—8—0. இதுவரை 41 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.